# ஆத்ம ஜோதி



புதிய கோணேசர் ஆலயம்

# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாதவெளியீடு]


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

—சுத்தானந்தர்.


ஜோதி 15 || சுபகிருது ஹூ சித்திரைமீ 1உ (14-4-63) || சுடர் 6


## பொருளடக்கம்


1. கோணேஸ்வரப் பெருமானுக்கு அஞ்சலி 202
2. பெரும் புகழாளர் 203
3. புத்தாண்டே! வருக!! வருக!!! 206
4. சச்சிதானந்த ஜோதி 209
5. இதயக் கல்வி 210
6. வழிக்கோர் துணை 211
7. உண்மை இன்பம் 214
8. தில்லை அருளூற்று 216
9. என்று தான் அடைவோமோ 217
10. குருபக்தி 222
11. மங்கையர்க்கழகு 225
12. கடோப நிஷதக் கருத்து 227
13. சிந்தனைச் சிறப்பு 231
14. ஆனந்தமாயி அம்மையிடம் அன்பர்கள் சம்பாஷணை 236
15. உண்மை அன்பர்களுக்கு ஒரு சொல் 238
16. அந்தர் யோக சாதனை 240



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ.3—00.

தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்:- திரு. க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:- திரு. நா. முத்தையா

"ஆத்மஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. [சிலோன்]

தொலைபேசி எண்:- 353.


## மங்களகரமான புது வருஷம்

சோபகிருது வருஷம்
நன்றாகச் செய்த தர்ம விளைவாகிய
சத்துச் சித்து அழகாம்
மோட்சத்தை உனக்குத் திறக்குமாக.

எழுந்திரு, விழித்திரு, கடவுள் சமீபத்திலுள்ளார். அன்ப! கருத்துச் செலுத்தி உற்றுக் கேட்குக. சேவி, நேசி, தியானி, அநுபூதியடை. உன்னுள்ளேயே அருள் மீட்புத் திறவுகோல் இருக்கிறது.

இவ்வுலகக் கவலைகள் தொல்லைகளுக் கப்பால், காம காஞ்சனத்தின் வஞ்சகக் கவர்ச்சிக் கப்பால், உன் இருதய குகையைத் திறந்து 'அதுவே நீ' யென்று அனுபூதியடைக.

உங்கள் அனைவருக்கும் ஒரு மங்களகரமான புது வருஷம். ஒளிவீசும் ஆரோக்கியமும் மங்காத மகிழ்ச்சியும் வாழ்வின் அடைவை நோக்கி விரைவான முன்னேற்றமும் கடவுள் உங்களுக்கு அருள்வாராக.

– சுவாமி சிவானந்தர்.

# கோணேஸ்வரப் பெருமானுக்கு அஞ்சலி

காடும் மலையும் கைகூப்ப கடலும்
வளைந்து மகிழ்ந்தார்ப்ப
ஓடும் புனலின் ஊட்டத்தால் உள்ளே
குளிர்ந்து நிலம் வேர்ப்ப
தேடும் இயற்கைச் செல்வமெலாம் தேங்கித்
தாங்கி நிற்கின்ற
பாடும் புகழ்சேர் கோணமலைப் பதியே
உன்னைப் பணிகின்றேன்.

பண்டிதர், இ. வடிவேல்

கருணையங் கடலே, அரிய
கற்பனை தனக்கு மெட்டாப்
பெருமையே பெருமைக் கெல்லாம்
பெருமையாய் வளர்ந்து நின்ற
அருமையே உரிமையோடெம்
அடியவர் சொரியுங் கண்ணீர்
உருவமாய் அருளுங் கோணை
ஒருவனே வாழ்க நீயே.

சிவசேகரனார்

மாலுடன் பிரமனாதி வானவர்க் கெட்டாதாகி
நாலுமா மறைகளாலு நவிலரும் பெற்றி யெய்திக்
கோலமுஞ் செயலும் பேருங் குணங்குறி யொன்று மின்றிக்
காலமுங் கடந்து நின்ற தெதுவதைக் கருத்துள் வைப்பாம்

திருக்கோணாசல புராணம்

# பெரும்புகழாளர்

(ஆசிரியர்)

இவர் யார்? இவர் கோணமாமலை யமர்ந்தவர். இவருக்கு இப்புகழ் வரக் காரணம் என்ன? செயற்கரிய செய்தமையால். அங்ஙனம் செய்த செயற்கரியன எவை? கைலைமலையைத் தூக்க முயன்ற இராவணனின் செருக்கை அடக்கி பின் அவனை ஆட்கொண்ட பெருங்கருணைச் செயல். இராவணனை ஆட்கொண்ட வரலாற்றால் தம்மை மறந்து பிழை செய்தவர்கள், பின் உணர்ந்து வழிபடுவார்களானால் அவர்களின் பிழையைப் பொறுத்து ஆட்கொள்ளும் பேரருளாளன் கோணமா மலையமர்ந்தவர்.

தன்னை மறந்து வேள்வி ஆற்றிய தக்கனைத் தண்டித்துப் பின் அவனுக்கு அருள் செய்த வரலாற்றால் தன்னை மறந்து செயலாற்றுகிறவர்களைத் தடுத்துத் தண்டனை செய்தலும் அமையாது அவர்களை ஆதரித்து உய்யக் கொண்ட திருவுள்ளச் சிறப்புப் புலனாகின்றது,

இவையிரண்டும் செயற்கரிய செயல்கள். இதனால் பெரும் புகழாளர் ஆகின்றார், இப் புகழ்ப் பெருமை மெய்மை சேர்ந்த புகழ் என்பதை 3-4-1963 கோணேஸ்வரப் பெருமானுக்கு நடந்த மகா கும்பாபிஷேகத்தின் போது உணர்ந்தோம். இலங்கையின் எல்லாத் திசைகளிலிருந்தும் கோணேஸ்வரப் பெருமானை நோக்கிக் கடலெனத் திரண்டு வந்தார்கள். வராதவர்கள் அத்தனை பேரும் மானசிகமாக அத்திசை நோக்கித் தொழுதார்கள். அப்பொழுது அவர் குருவராய் நின்று குரைகழல் வணங்கக் காட்சி கொடுத்தார். திருமாலுக்கு மாத்திரம் திருவடி தரிசனம் கிடைத்ததல்ல. கும்பாபிஷேகத்தைப் பார்த்தவர், படித்தவர், நினைத்தவர் எல்லார்க்குமே திருவடி தரிசனம் கிடைத்தது. இதனால் யாவரும் விரும்பும் பெரும்புகழாளர் ஆனார்.

இத்தகைய கோணேஸ்வரப் பெருமானின் திருக்கோயிலினால் திருக்கோணமலை புனித நகராக மாறியது. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நின்ற அடியார்களே அதற்குச் சான்று. கோணேஸ்வரப் பெருமானின் திருக்கோவில் அமைந்த மலைக்கோட்டை பரிசுத்த நகரமாக்கப்பட வேண்

டும். இன்று இலங்கையில் ஒரு புதிய விழிப்பு நிலை ஏற்பட்டுள்ளது. கோயில்கள் உள்ள இடமெல்லாம் பரிசுத்த நகரமாக்கப்பட வேண்டும் என்பதுதான். களனி பரிசுத்த நகராக்கப்பட்டு விட்டது. கதிர்காமம் பரிசுத்த நகரமாக்கப்பட இருக்கிறது. அநுரதபுரம் பரிசுத்த நகரமாகப் பிரகடனம் செய்யப்பட்டு விட்டது. அதேபோல் மலைக்கோட்டையும் பரிசுத்த நகரமாக்கப்பட வேண்டும். இதற்காக திருக்கோணமலை வாழ் சைவப்பெருமக்களும் இலங்கையின் பல வேறு பகுதிகளிலுமுள்ள சைவச் சங்கங்களும் ஒரேமுகமாக நின்று அரசினரிடம் தமது வேண்டுகோளை விடுக்க வேண்டும். மண்டலாபிஷேகத்திற்குக் கலாச்சார மந்திரி, பிரதம மந்திரி போன்றோர் அழைக்கப்பட்டு அவர்கள் உள்ளத்தில் பதியும்படி வற்புறுத்தப்பட வேண்டும். மலைக்கோட்டை புனித நகரமாக்கப்பட வேண்டும் என்றதற்காகவே தனியாக ஒவ்வொருவரும் இறைவரிடம் விசேட பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

படை வீரர்களும் அரசாங்க உத்தியோகத்தரும் இருந்த கட்டிடங்களை என்ன செய்வது? என்று சிலர் சிந்திக்கலாம். அவைகள் எல்லாம் தேவார பாடசாலைகள், வேத பாடசாலைகள், பிரசங்க மண்டபங்கள், அடியார்கள் மடங்கள், யாத்திரீகர்கள் தங்குமிடங்களாக மாறவேண்டும். கோட்டைக்குள்ளே எந்த விதமான வியாபார ஸ்தலங்களும் உண்டாகாது பார்த்துக் கொள்ள வேண்டும். எவ்வித வாகனங்களும் உள்ளே செல்ல விடாது யாத்திரிகர்கள் கோட்டை வாசலிலிருந்து நடந்தே செல்லுதல் சிறந்ததாகும். தேவார இசை முழக்கமும் வேதபாராயண ஒலியும் நிறைந்து கோட்டை முழுவதும் ஆத்மீக அலையால் நிரப்பப்பட வேண்டும். மந்திர ஒலிகள் மக்களை ஈர்த்து ஈர்த்து என்புருக்க வேண்டும். இத்தகைய முறையில் கோட்டைமலை புனிதநகரமாக்கப்பட வேண்டும்.

கோணேஸ்வரர் ஆலயம் கும்பாபிஷேகம் நடைபெற்ற காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்று நினைக்கும் போது எமது பிறவி புனிதமடைந்துள்ளது என்ற கருத்து எமது உள்ளத்திற்கு ஒரு மகிழ்வைக் கொடுக்கின்றது. அதேபோல எமது வாழ்வுக்காலத்திலேயே புனித நகரமாகிவிட வேண்டுமென்ற ஒரு துடிப்பு ஒவ்வொரு சைவ மகன் உள்ளத்திலும் எழவேண்டும்.

இப்போது அங்கே வெள்ளைச் சுருட்டுப் புகை எழும்புகிறது. அது ஓமப் புகையாக மாற வேண்டும். சினிமாப்



பாட்டு ஒலிக்குமிடம் தேவார இன்னிசைப் பாடல் முழங்குமிடமாக மாற வேண்டும். அரசியல் கருத்துக்கள் பரிமாறுமிடம் புராணக் கதைகளின் தத்துவங்களை விளக்குமிடமாக வேண்டும். எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும் அருட் பெருஞ் சொத்தாக மாற வேண்டும். கோட்டைச் சுவர் எல்லாம் கோணேசப் பெருமானைப் பற்றிய பாடல்கள் விளக்கமுறல் வேண்டும். சமய சாதனைகளுக்குரிய நிகழ்ச்சிகள் மாதந்தோறும் கோட்டைக்குள்ளே நிகழ வேண்டும். கோணேசுவரப் பெருமானைப் பற்றிய புராணங்கள், மான்மியங்கள், அந்தாதிகள் ஏட்டு வடிவில் உள்ளன. அவையெல்லாம் நூல் வடிவில் வரவேண்டும்.

இத்தகைய எண்ணங்கள் யாவும் கோணேசுவரப்பெருமானின் புனருத்தாரண கும்பாபிஷேகத்தின்போது உதித்தவை. இக் கருத்துக்களைச் சைவப் பெருமக்கள் முன்பு சமர்ப்பிக்கின்றோம். சைவப் பெருமக்கள் யாவரும் முன்வந்து ஆவன செய்வார்களாக. கோணேசுவரப் பெருமானின் திருவருள் பொலிவதாக.

## பதமலர் பணிகுவோமே!

(யோகதாசன். வ. புண்ணியமூர்த்தி)

ஆதியும் முடிவுமின்றி
அனைத்துமே தானேயாகிச்
சோதியாய் வடிவுமாகித்
தோற்றமும் மறைவுமாகி
ஏகனாய்ப் பலவுமாகி
இலங்கிடு முமையாளோர்
பாகனாய் விளங்குமண்ணல்
பதமலர் பணிகுவோமே!

ஓலமிடு பாலகனி னுற்றதுயர் நீங்கிடவே
காலனவன் வீழ்ந்தொழியக் காலெடுத்த - காலனையே
ஏத்திப் பணிந்திருந் தெந்நாளு மலர்மாலை
சாத்திப் பிடிப்போம் சரண்.

அமருறு துன்ப மழிந்திடவே சமருக்குக்
குமரனெனு வீரக் கொழுந்தீந்த — பரமனையே
சிவசிவ என்றனு தினந்துதி செய்திடப்
பவவினை நீங்குமே பயந்து.

# புத்தாண்டே! வருக! வருக!!!

வித்துவான் வசந்தா வைத்தியநாதன்

புத்தாண்டு பிறக்கின்றதுமக்களின்மனங்களிலேமகிழ்ச்சி ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்ற விதிப்படி பழைமை அகன்று புதிய செயல்களிலே ஊக்கம் பிறக்கின்றது. சென்றதை விலக்கி வருவதை வரவேற்க தோள்களிலே திண்மை ஊறுகின்றது

சித்திரைத் தையலை வரவேற்க காலத்தேவன் தன் இரு கரங்களையும் நீட்டுகின்றான். இயற்கை அன்னை வண்ண வண்ணக் கோலங்களைத் தீட்டுகின்றாள். தென்றலின் தன்மை தவழ்கிறது. மாவும் வேம்பும் பொன்னொத்த மலர்களை எங்கும் வாரியிறைக்கின்றன. வேரில் பழுத்த பலாவின் இனிய மணம் காற்றிலே தவழ்ந்து வருகின்றது. தெங்கும் கமுகும் ஆலவட்டம் சுற்றுகின்றன. பண்களிலே கண்ணுக்கினிய பச்சைப் பயிர்கள் பொன்னொளி வீசுகின்றன.

இளவேனிலின் வரவிற்கு கருங்குயில்கள் கட்டியம் கூறுகின்றன. கிள்ளைகள் தம் இளங் குஞ்சுகளுக்கு மாங்கனிகளைக் கொத்திக்கொத்தி ஊட்டுகின்றன. வரி வண்டுகள் மலரிலுள்ள மதுவை மாந்தி இனிய பண்களைப் பாடிப் பறக்கின்றன. குயில்கள் தம் பெடைகளுக்கு தீயின் பிழம்பையொத்த மாவின் இளந்தளிர்களை தம் அலகால் கோதிக் கோதிக் கொடுக்கின்றன. மல்லிகை, முல்லை மலர்கள் தமது முத்துப் பற்களைக் காட்டி மோகன நகை புரிகின்றன. இத்தகைய இனிய சூழலிலே புத்தாண்டு பிறக்கின்றது.

புத்தாண்டன்று தமிழ் மக்கள் யாவரும் புத்தாடை புனைந்து மனத்திலே மகிழ்ச்சிக் களி துளும்ப ஒருவரை ஒருவர் வாழ்த்தி,

''சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்''

என்ற பொய்யாமொழியாரின் மெய்ம்மொழிக்கிணங்க சுற்றத்தினர் அனைவருடனும் கூடி விருந்துண்பர். விருந்தில் முக்கியமாக இடம்



பெறுவது வேப்பம்பூ. இது உடல் நோயைப் போக்கும் ஓர் சிறந்த மருந்துப் பொருள். பின்பு நல்ல நேரமாகப் பார்த்து புதுவருடம் ''பஞ்சாங்கம்'' படிப்பார்கள்.

''செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்''

என்பதற்கேற்ப பானகமும், நீர்மோரும் வழங்குவர். இனி கேரளத்திலே இதனைக் கொண்டாடும் முறையைப் பார்ப்போம்.

கதிரவன் சித்திரை முதல் பங்குனி முடிய மேஷம் முதல் மீனம் வரையுள்ள 12 இராசிகளில் சஞ்சரிக்கின்றான். காலச் சக்கரச் சுழற்சியில் சூரியன் மேல் நோக்கிச் செல்லும் போது அதிக வெப்பத்துடனும், கீழ்நோக்கிச் செல்லும் போது வெப்பம் குறைந்தும் காணப்படுகின்றான். இதையே சோதிடர்கள் சிதமேஷ ராசியில் சூரியன் உச்சனாகின்றான் எனக் கூறுகிறார்கள். சித்திரையில் கதிரவனை வரவேற்கும் முகமாக கேரளத்தில் ''சித்திரை விக்ஷு'' சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

புத்தாண்டிற்கு முதல் நாள் இரவே வீட்டிலுள்ள முதுமகளிர் கடவுளரின் உருவப் படங்களுக்கு முன்பாக கிழக்கு நோக்கி ஓர் வட்டத் தட்டில் அரிசியைப் பரப்பி, அதன் மீது புதுத் துணி விரித்து தேங்காய்களை உடைத்து வைப்பர்.[தேங்காய் நன்கு உடைவதை நன்நிமித்தமாகக் கொள்வர்] புதுக் காசுகளைப் பரப்புவர். சரக்கொன்றை மாங்காய், பொன் அணிகள் அமைத்து அழகு படுத்துவர். தட்டின் பின்புறம் முகம் பார்க்கும் ஆடியைப் பொருத்துவர். இருபுறமும், வாழை, பலா முதலிய கனிகளை வைப்பர்.

மறுநாள், எல்லோரும் அம் மங்களப் பொருட்களிலே கண் விழிப்பர், அப்படிக் கண் விழிப்பதை ''கணி காணுதல்'' என்று கூறுவர். கணி கண்டால் வருடம் முழுதும் நன்மைகள் பல வந்தெய்தும் என்பது அவர்கள் துணிவு. கணிகண்ட பிறகு, வீட்டிலுள்ள, உற்றார் உறவினர் அனைவருக்கும் புதுக் காசுகள் அளிப்பர். இதற்கு ''விக்ஷீக் கணி கோட்டம்'' என்று பெயர். பின்பு உறவினர்களின் இல்லங்களுக்குச் சென்று நலம் விசாரித்து, மதியம் சுற்றமும் நட்பும் சூழ விருந்துண்பர்,

இவ்வாறாக மக்களின் மனத்திலே நம்பிக்கை ஒளியூட்டும் ''சோபகிருது'' ஆண்டு பிறக்கிறது இவ்வாண்டிலே

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாது
வேறொன்றறியேன் பராபரமே''

என்ற தாயுமானரின் வழியிலே நின்று, நலத்தையும் பலத்தையும் அளிக்க வேண்டி ஆண்டவனை இறைஞ்சுவோமாக!


## கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியாரின்

### தவயோகத்திற் கனிந்த அற்புத நூல்கள்

1. கீதாயோகம்: மூல சுலோகமும் தமிழிலேயே உள்ளது. கண்ணன் உள்ளத்தைக்காட்டுவது; உங்கள் வாழ்விற்கு ஒளிதரும் அரிய பெரிய நூல் — விலை ரூ. 2--50
2. ஆத்மசோதனை: யோகியின் அரிய அனுபவங்கள்; பல மகான்களுடன் பழகிய நிகழ்ச்சிகள்—உயர்ந்த இலக்கிய சிருஷ்டி — ரூ. 4—00
3. ஆத்மநாதம் (அருளிற் பூத்த பாடல்கள்) ... 3—00
4. திருக்குறளின்பம் ... 3—50
5. உலகப் பாட்டு ... 1—50
6. ஸ்ரீரமணனுபவ கீதம் ... 0—50
7. ஊமையன் சண்டை ... 1—50
8. மனப்புயல் ... 1—50
9. இவளும் அவளும் ... 0—50
10. யோக சித்தி (மூலம்) ... 0—40
11. சுத்த சக்தி உபாசனை ... 0—75
12. விஷ்ணு தீபம் ... 0—25
13. அருட்சோதி இராமலிங்கம் ... 1—50
14. சிங்க நாதம் (அச்சில்)
15. Integral Yoga ... 1—25
16. Voic e of Tayumanar ... 2—00
17. The Gospel of Perfect Life ... 4—00
18. St. Rama!ingam ... 1—50
19. Yogi Shuddhananda Bharati (A Study) ... 4—00
20. பாரத சக்தி மகா காவியம் ...15—00
21. விஞ்ஞான மணிகள் ... 1—50
22. அற்புத பெண்மணி ... 1—00
23. நவரஸ நடனாஞ்சலி ... 2—00
24. கல்விக் கதிர் ... 2—50

**சுத்தானந்த நூலகம்,**

''யோக சமாஜம்'' — அடையாறு — சென்னை-20.




# சச்சிதானந்தஜோதி

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

★

மங்கல மாக மாந்தர்
வளம் பெறும் உலகில் வாழச்
செங்கதிர் போல வேதச்
சிகரநல் லொளி துலங்கப்
பொங்குயர் வேதாந் தத்தின்
புகழ்மணம் பொலிய எங்கள்
சங்கர ஜோதி வாழ்க
சச்சிதா னந்த ஜோதி!

ஊனுயிர்க் குலத்துக் கெல்லாம்
ஒருமையைத் துலக்கும் வேதம்
தேனுயிர் வாக்கி னாலே
தெய்வமே யருளும் வேதம்
வானுயிர் முரசு கொட்டி
வையகம் பரவக் காண
நானுயிர் துடிக்கின்றேன் — அந்
நாளினைக் கொணர வாரீர்!

அந்தண மரபி னுக்கும்
அருமறைப் பண்பி னுக்கும்
சந்ததம் இன்ப மோங்கத்
தருணமா மழைபோ லிங்கே
வந்தனன் வித்யா தீர்த்த
மாமுனி வரன்எம் அண்ணல்
முந்தவன் சேவை செய்ய
முந்துமின் உலகமெல்லாம்.

யாவைக்கும் உயிரதாகும்
இதயத்தின் கனலதாகும்
தேவைக்குச் செல்வம் போலும்
தியானமோனத்தால் எய்தும்
சாவைக்கு மைக்கும் ஆத்ம
சக்தியை வளர்த்து வேத
சேவைக்குத் தொண்டர் வாரீர்
தேசத்தைப் பெருமை செய்வோம்.

அவக்கனலாம் அரக்கர்
அணுக்கனலென்ன செய்யும்?
பவக்கனலென்ன செய்யும்?
பக்குவ ஞான சீலர்
தவக்கனல் பரவி யிங்கே
தணல்பெறச் சீவனுள்ளே
சிவக்கனல் எழுந்தால் எல்லாம்
சின்மயானந் தமாமே.

# இதயக் கல்வி

(ஸ்ரீ சுவாமி இராஜேஸ்வரானந்தர்)

உலகில் ஒவ்வொரு நாடும் மனக்கல்வியில் அதிமிகு வற்புறுத்துதலுடன் மகிழ்கிறது. மேலும் இதயக் கல்வியில் மதிப்பீனமாகக் குறைபடுகிறது.

இதயக் கல்வி அதி முக்கியமானது. அதை அசட்டை செய்யக் கூடாது. அது மதிப்பு மிகுந்ததால் வாழ்வின் விளைவுகள் அனைத்தும் அதிலிருந்தே தோன்றுகின்றன.

கற்பிக்கப்பட்ட இதயம் ஒரு தனியனின் வாழ்வில் சுமையாயிருக்கும் குறைபாடுகள், திரிபுகள், தகுதியில்லாத் தன்மை யுணர்ச்சி முதலியவற்றை நீக்குகிறது. அது உலகை மூடியிருக்கும் போர்வையைத் தள்ளிப் பேரானந்த மரபுரிமையை உரிமையாடுகிறது.

கற்பிக்கப்பட்ட இதயம் பணிவிணக்க முடையது; மேலும் மேலீடான சொல் வன்மையைப் பொருட்படுத்துவதில்லை. கற்பிக்கப்பட்ட இதயம் ஆழ்ந்த கருத்துள்ளது; மேலும் வாழ்வாகிய போரில் கடித்தல் பிடித்தலின் பிரயோகத்தை வேண்டுவதில்லை. கற்பிக்கப்பட்ட இதயம் கண்ணோட்டமுள்ளது. அதற்குமுன் மதில்கள் வீழ்கின்றன; கதவுகள் திறக்கப்படுகின்றன.

பணிவிணக்கம், உணர்ச்சியாழம், கண்ணோட்டம் முதலியன வாழ்வையும் தெய்வீகத் தூண்டுகைக்கு மறுதலிப்பாகச் சீவித்தலையும் வளமூட்டும், சிறப்பிக்கும், சீர்படுத்தும், வலிமைப் படுத்தும் உண்மையான அரும் பெரும் பண்புகள்.

கற்பிக்கப்பட்ட இதயம் செயல் முறையில் சேவையினதும் தியாகத்தினதும் படிப்பினையை வெளியிடுகிறது. சேவையின் இரகசியம் பரமான்ம ஒளி உடன்கொண்டு வாழ்தலே. தியாகத்தின் இரகசியம் தனியான்மாவைப் பேரண்ட ஆன்மாவுக்கு ஒப்படைத்தலே.

தோற்றமாகிய புறவுலகம் தூய இதயத்தின் தெளிவான உட்கண்ணுக்குத் தெளிவாகத் தெரிகின்றது. பயபக்தியுள்ள, விழுமிய இதயத்தின் வெளிப்படுத்துங் கண் குறைபாடு, தவறு, நோய், இசைவிணக்கமின்மை முதலியவற்றை நிலையில்லாததாயும் மெய்மையற்றதாயும் செய்கிறது. உண்மையின் ஒளிக்கு வெளிப்படுத்தப்பட்டதும் அவை பனிப்படலம் போல் உருகுகின்றன.



# வழிக்கோர் துணை

(கோவை. கி, சுந்தரம்)

வழிக்கு ஓர் துணையா? ஆம் வழிக்குத்தான் துணை. அப்படியானால் எவ்வழி? தனிமையான வழியா? ஆம். தனியான வழிதான். பயம் நிறைந்த வழிதான். பயமா? ஆயின் கள்ளர்களும், மற்றையோரும் இடர் விளைவிக்கும் வழியோ? அப்படியாயின் துணைக்கு யாரையேனும் அழைத்துச் செல்லலாமே.........அல்ல, அல்ல எவரையுந் துணைக்கு அழைத்துக் கொண்டு போக முடியாத வழி. ஆனால் இதற்குத் துணையிருந்தால் தான் பயம் நீங்கி நிம்மதியை அடைய முடியும். "என்ன? வழி என்றும் துணை என்றும் மட்டும் கூறினால் எப்படிப் புரிந்து கொள்வது? எத்தனையோ விதங்களில் துணையென்பது வாய்க்கிறது. இனிமையான உலகக் காட்சிகள் கண்ணுக்கும், அற்புத பாடல்கள் செவிக்கும், இனிய சொற்கள் வாக்கிற்கும் துணையாகிறதே! இது தவிர வேறு என்ன புரிய முடியும்? அல்ல! அல்ல. துணைக்கு ஒன்றே வேண்டும். அதுவே எல்லாப் பொறிகளுக்கும் கேட்டை நிறுத்திச் சிந்தை செய்யத் தக்கதாகவும் இருக்க வேண்டும். முன்பு சொன்ன பயந்த தனிவழிக்குத் துணையாகவும் அமைய வேண்டும். நன்று! நன்று! நான் கண்டு கொண்டேன். ஓர் எழிலுருவம் வேல் தாங்கி என் எதிரே நிற்கிறது. அதன் பெயரும் எழிலைக் குறிப்பிடும் முருகன் என்னும் நாமம்தான். அற்புதமான தண்டைச் சிலம்புகள் அஞ்சேல்! அஞ்சேலெனக் கொஞ்சி ஆட அடியார் உள்ளத்தில் என்றும் பதிந்திருக்கும் அந்த இணையடிகள், திரு மென் மலர்ப்பாதங்கள் என் இரு விழிகளைக் கவருவதாக உள்ளன. ஆம்! விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் தாம். விழிக்கு மட்டுமா? மொழிக்கும் அல்லவா துணை கிடைக்கிறது. முருகா என்னும் அவ்வினிய நாமம் உள்ளம் ஒருமித்து நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து நெகிழ்ந்து உருக கல்கல் தொனியோடு தோன்ற இனிமை! இனிமைதான்! மொழிக்குத் துணை முருகாவெனும் இனிய நாமம்.

விழியும், மொழியும் அனுபவித்தால் போதுமா. பாரமாய பழவினையல்லவா முந்தி, முந்தி அனுபவித்தலையும் மறக்க வைக்கிறது. அப் பாரமாயபழவினைபற்றறுத்து,என்னைத்தன்வாரமாக்கிவைத்து, வைத்ததன்றி என்னுள் புகுந்து ஆட்கொள்ளும் அவன் எழில், பன்னிரு திருக்கரங்கள் அருள் கொண்டு அபயம் காட்டவல்லவா காத்திருக்கின்றன. அன்பு கொண்டு கூடியதல்லவா அவ்வுருவம். அத்துடன் நில்லாது அணைக்கக் காத்திருக்கும் அக்கரங்கள் முன்பு செய்த பழிக்குத் துணை போலும்!

அற்புத தோற்றம் கொண்ட அவ்வழகன் தனது எழில் மட்டும் போதாது என்றே அவ்வரும் மயிலையும் தன்பாற் கொண்டான். அந்த மயூரம் ஏதோ கூறுகிறதே. அருகிலுள்ள வேலையே நோக்கினாற் போல் தோன்றுகிறது. அதன் பழம் நினைவு எழுந்தது போலும் பெரும் சிவ பக்தனாக இருந்தாலும் சிவக் குமாரனான திருமுருகனைப் பழித்தலால் சீற்றத்திற்குள்ளானான். சூரபன்மன் எனும் ஓர் மாய அரக்கன். தன் தமையரோடும், மற்றோரோடும் கூடி தகு நிலை பெற்ற தவ முனிவோருக்கும் வானாடாளும் வகையான் இந்திரனையும் அவர் தம் பொற்கொடியாம் மெல்லியலாளையும் முறைநிலை தவறி முற்பகல் விழைந்து முயலுவோனாக, பிற்பகல் அதனால் பெருமதி கெட்டு, பிறரை மாய்த்து உண்மைக் குமரனின் உருவையும் பழித்தான். ஈது கண்டு அவன்பாற் திருவுளம் கொண்டு திருத்த விழைந்த திருமருகன் தம் வேற்படையால் அவன் அழி உரு போக்கி அழியா இடம் தந்தார். அந் நிலையில் நின்றல்லவா அம் மயில் பேசுகிறது. அது தான் உண்மை காட்டி உயர்தனி வேலின் உரைக்கரும் கருணை உன்னுகிறது. ஆக அவ்வேற்படையே, அந்த ஞானப் படையே பயந்த எம்மனோர்க்குத் தனிவழிக்கு உதவற் பாலது. ஆக "பயந்த தனிவழிக்கு ஓர் துணை செங்கோடன் மயூரமும் அவன் கடம்புமே."

இப்படியெல்லாம் எந்த உள்ளம் முடிவிட்டது என்றுதானே கேட்கிறீர்கள்! அது நம் அருணகிரிப் பெருந்தகையின் உள்ளம். நமக்கு எழும் பெரும் வினாவிற்கு அவர் உள்ளக் கிடக்கையின் மூலமே பதில் கிடைத்து விட்டது. இனி அவர் வழியாகக் கூறுவோம்.

"விழிக்குத்துணை திருமென்மலர் பாதங்கள் - மெய்ம்மை குன்றா
மொழிக்குத்துணை முருகா வென்னும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத்துணை அவன் பன்னிரு தோள்களும் பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே."

துணையாக நாம் நினைத்துக் கொண்டிருக்கும் பொருள்கள் உண்மையில் எமக்குத் துணையில்லை. பட்டினத்தடிகள் நம்மை எண்ணித் தான் போலும், மனதுக்குக் கூறுவது போலக் கூறுகிறார்.

"மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வ தெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டு விட்டோமினிக் கேண்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையுமுண்டே"

என்று கூறும் அவர் உள்ளம் நிலையாமை பற்றி எண்ணி எண்ணி உறுதி கொள்கிறதெனில் வியப்பில்லை. உலகில் எப்பக்கம் திரும்பினும் பயமும், மயக்கமும் ஏற்பட்டு நம் உள்ளத்தை நிலைகுலைய அடிக்



கின்றன. இந்நிலையில் எந்நிலையிலும் குலையா உறுதி, தீவிர வைராக்கியமே நமக்குத் தேவை. இதுபற்றி பர்துரு ஹரி தனது வைராக்கிய சதகம் என்ற நூலில் முதல் ஸ்லோகமாகக் கூறுகிறார்.

போகே ரோக பயம்! குலே ச்யுதி பயம்!
ரூபே ஜராயாத பயம்! மௌனே தைன்ய பயம்!
பலே ரிபு பயம்! வித்தே க்ருபாலாத் பயம்!
சாஸ்த்ரே வாத பயம்! குணேகல பயம்!
காயே க்ருந்தாத் பயம்! சர்வம் வஸ்து பயான் விதம்
புவித்ராணம்! வைராக்ய மேவா அபயம்!

ஆக பணமிருந்தாலும், குணமிருந்தாலும், பாண்டித்யம் இருந்தாலும், நலம் இருந்தாலும், அழகிருந்தாலும், அமைதியாயிருந்தாலும், அவற்றிற்கெல்லாம் எதிர்ப்பு உண்டு. அதனால் பயம் உண்டு. ஆகவே மனமே, வைராக்யமே பயம் நீக்க மருந்து. அதைக் கொள்! கொள், என்கிறார். நமக்குக் கொண்ட இப்பயமாம் வியாதி நீக்க இறைநாமம்தான் நன்மருந்து. இம் மருந்திற்குப் பலன்தர ஒரே ஒரு நிபந்தனைதான் உண்டு. அதுதான் உலகின் நிலையாமை பற்றிய எண்ணமும், இம் மருந்தின் மீது கொண்ட பரிபூரண நம்பிக்கையும். இந்த முறைப்படி அனன்ய பக்தி என்ற தேனுடன் கூடி உண்டால் இது மருந்தாகவே இல்லை. பயம் காட்டும் மரணம் வெல்லும் அமுதமாகவே இனிக்கும். இதைத் திருமங்கையாழ்வார் அனுபவித்துப் பேசுகிறார். அவரது உளம் நாராயணா வென்னும் நாமாமிர்தத்தில் ஊறிச் சுவைத்ததாம். அதுவே துணையாக அமைகிறதாம். உய்யக் கொண்ட ஓர் நாமம் நாராயண நாமமாம்.

கற்றிலேன் கலைகளைம் புலனும் கருதும்
　　கருத்துளே இருத்தினேன் மனத்தை
பெற்றிலேனதனால் பேதையேன் நன்மை
　　பெருநிலத் தாருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டி திருவேன் தவிர்ந்தேன்
　　செல்கதிக் குய்யுமா றெண்ணி
நற்றுணையாக பற்றினே னடியேன்
　　நாராயணா வென்னும் நாமம்.

அருளொடு பெருநிலம் அளிக்கும் அவன் நாமமே நமக்குத் துணை. அருணகிரி அனுபவிப்பதும், பர்துரு ஹரி கூறுவதும், திருமங்கை மன்னன் பேசுவதும் மற்ற அடியார் அனைவரும் கூறுவதும், கொண்டிருப்பதும் அவன் நாமமாகிய துணையைத்தான். அதுவே இம்மைக்கும், மறுமைக்கும், ஏழேழ் பிறவிக்கும் உறு மருந்து. ஆராவமுதன் நாமமே அவனி காக்கும் நாமம். அதுவே நமக்குத் துணையாகி எந்நாட்டவர்க்கும் அருளிக் காப்பதாக.

தென்னாடுடையசிவனேபோற்றி! எந்நாட்டவர்க்கும்இறைவாபோற்றி!

# உண்மை இன்பம்

குரு, ஆ. கந்தசாமி ஐயர்—திருச்சி.

பற்று மூவகையாக உண்டாகிறதென்று ஆன்ருேர் வரையறுத்துள்ளனர். மண், பெண், பொன் என்னும் மூன்ருலும், உண்டாகும் ஆசைகளே அம்மூவகைப் பற்றுக்கள் எனப்படுகின்றன. மண், பொன் இரண்டையும் ஒன்ருகக் கோடல் பொருந்தும். எனவே பொன் பெண் இரண்டும் பற்றுக்கு ஏதுவாம். பொன்னை விடப் பெண் உலகக் கயிற்றில் பிணித்துக் கூத்தாட்டுக் காண வல்லது. பொன் பெரிதும் பெண்ணில் அடங்கிவிடும் என்னலாம். இவற்றைத்தாரேடணை, புத்திரேடணை, தனேடணை, என வேருகவுங் கூறுவர்.

இப்பற்றுக்கள் அவற்றிஞலுண்டாகும் பொறி இன்பத்தாலாகின்றன. ஐந்தவித்தார்க்கு இவற்றை எளிதில் நீக்கிவிட இயலும். இவை பொறி இன்பம் பயப்பனவாகையால் இவற்றை நீக்கிஞலன்றி உண்மையின்பம்-வீடுபேற்றின்பம் தலைப்படுவதில்லை.

பற்றில் பயின்ருர் அப்பற்ருல் மென்மேலும் பற்றப்படுவார். இன்பம் பற்ருல் வரும் என மயங்கி ஈடற அழியும் தகையராவர். ''ஒருவனை வஞ்சிப்ப தோரும் அவா'' ஆதலால் பற்று நம்மை வஞ்சித்து வாழ்க்கை வலையில் பிணிக்கின்றது. பற்றுக்களாகிய பல புரிகள் கொண்ட கயிறுகள் மக்களைப் பலவாறு பிணித்து அலைத்து ஆட்டிவிடுகின்றன.

**ஆசையெனும் பெருங்காற்றூடிலவம் பஞ்செனவும் மன**
**தலையுங்காலம்**
**மோசம் வருமிதனுலே கற்றதுவுங் கேட்டதுவும் முழுதுந்**
**தூர்ந்து**
**நேசமு நல் வாசமும்போய் புலனுயிற் கொடுமை பற்றி**
**நிற்பரந்தோ**
**தேசு பழுத்தருள் பழுத்த பராபரமே நிராசையின் றேற்றெய்**
**வமுண்டோ**

என்னுந் தாயுமான வள்ளலின் வாக்கிற்கிணங்க ஐம்பொறி இன்பங்களைத்



துறக்குந்தோறும் துன்பம் நீங்குகின்றது. அவற்றுள் ஒன்றைத் துறப்பினும் அதனுல் வருந் துன்பம் நீங்கும்.

**யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.**

என்பது பொய்யா மொழி.

ஐம்பொறிகளைப்பற்றுந் தோறும் இன்பத்தைத்தூது விடுத்து துன்பம் பின்பற்றி வருகின்றது. அவற்றை நீக்குந்தோறும் அவ்வுலகியல் இன்பத்தூடு வெருட்டித் துன்ப வாயிலைச் செறித்து உண்மை இன்பம் தலைப்பட்டு உறுதிகொள்கின்றது.

தொடரும்


## நல்ல நூல்கள்

### திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர்

வெளியீடு;- திருக்கோணமலை, திருக்கோணேசர் ஆலயப் புனருத்தாரண கும்பாபிஷேக சபையார்

விலை:— **2 ரூபா் 25 சதம்**

திருக்கோணேசர் ஆலயத்தின் உற்பத்தி காலந் தொட்டு இன்று வரையுள்ள அதன் வரலாற்றையும் பெருமானின் மகிமையையும் பல ஆத்மீகச் செல்வர்கள் பல கோணங்களிலிருந்து படம் பிடித்துக் காட்டுகின்ருர்கள். பல பிரதிமைப்படங்கள் மலரை அலங்கரிக்கின்றன. ஒவ்வொரு சைவர்களுடைய இல்லத்திலும் இருக்க வேண்டியதொரு மலராகும்.

### திருக்கோணேஸ்வரம்

ஆசிரியர்கள்:- **புலவர் வை. சோமாஸ்கந்தர் அவர்கள்**
**அ. ஸ்ரீ ஸ்கந்தராசா B.A. அவர்கள்**

விலை:- **1 ரூபா 75 சதம்**

இது சரித்திரச் சான்றுகளுடன் கூடிய ஒரு ஆத்மீக வரலாற்று நூலாகும். நம் முன்னேர் ஆலயத்திற்கும் ஆலய வழிபாட்டிற்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதை விளக்கும் ஒரு கண்ணுடி என்றே கூறலாம்.

குறிப்பு:- மேற்கூறிய இரு புத்தகங்களும்

பொ. கந்தையா ''தனசக்தி'' திருக்கோணமலை.

என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

# தில்லை அருளூற்று

''சாந்தன்''

நெற்றிக் கண்ணுடையோன்
நீர்மங்கை தலைசுமந்தோன்
சற்றுங் குறைவில்லாச்
சக்திதரும் மணவாளன்
உற்ற வினைதீர்க்கும்
உமையாளின் காதலனே
வெற்றிக் கதிரோனின்
மேலான தந்தையவன்

தில்லை வீற்றிருந்து
திருநடனம் புரியுமவன்
எல்லை அற்றதொரு
இணையில்லா அருட்கருணை
சொல்லுக் கடங்காது
தோத்திரத்தில் வந்துநின்று
தொல்லை ஒழித்திடுவான்
துயரத்தைப் போக்கிடுவான்

நடனத் திருக்கோலம்
நாளெல்லாம் பார்த்திடலாம்
இடரே அற்றஅவன்
இமையாத பார்வைதனில்
கடந்த அண்டங்கள்
கணக்கற்றுத் தோன்றிடுமே
சுடராய் அருளமுதாய்
தூயஒளி வீசிடுவான்

உள்ளம் உருகுதப்பா
உன்னுருவை நினைத்திட்டால்
கள்ள வாழ்க்கையினை
கலைத்துவிடு இப்போதே
நல்ல இணையடியை
நாடுகிறேன் எப்போதும்
தில்லை அருளூற்றே
சேர்த்துக்கொள் உன்னடியில்



# என்று தான் அடைவோமோ?

(செல்வி கோமதி சுப்பையா)

ஈஸ்வரன், ஆண்டவன், இறைவன், தெய்வம்........என்றெல்லாம் பல நாமங்களால் அவனை வழுத்துகிறோம். இந்த நாமங்களால் குறிக்கப்படுபவனை எங்கே காட்டுங்கள், அவனைப் பற்றி விளக்குங்கள் என்றால் நம்மில் பலர் விழிக்கின்றோம், சிலர் திகைக்கின்றோம். கேட்கப்பட்ட உடனேயே ஒரு சிறிதும் திகைக்காது காட்டி விட்டான் தூணை ப்ரஹ்லாதனன். இதிலெங்கே இருக்கப் போகிறார் என்றெண்ணி உதைத்தஹிரண்யனுக்குமுன்நரசிம்மஉருவத்தோடுதோன்றினான்நாராயணன்.கடவுளைப்பார்த்ததுண்டாஎன்றுநரேந்திரன்கேட்டகேள்விக்குத்தான்விடைவருகிறதுஸ்ரீராமக்கிருஷ்ணரிடமிருந்து, ''உன்னை என் எதிரில்காண்பதுபோல் கண்டிருக்கிறேன், காட்டவும் முடியும்'' என்று வெளியே நீட்டிய நரேந்திரனின் நாக்கில் வைத்தார் ஒரு விரலை. மின்சாரம் பாய்வது போன்ற ஓர் உணர்வு. கண் முன் திவ்ய தரிசனம்! இன்னும் இப்படி எத்தனையோ பல! ஆனால் மறுமுறையாரும் இக்கேள்வியைக் கேட்டால் நாம் சிறிதும் சிந்திக்க வேண்டியதில்லை. ஏன்! அவர் எம் சிந்தையிலேயே கோயில் கொண்டிருக்கும் போது நாம் எங்கு போய் அவரைத் தேடுவது?

நாம் தினமும் காலையிலெழுந்து கடவுளை வணங்குகிறோம். கோயிலுக்குச் செல்கிறோம். பூ, பழம் வைத்து அவனை வணங்குகிறோம். இருந்தாலும் இந்த இறைவன் எம் முன் வர மறுக்கிறானே! என்று நாமெல்லாரும் குறைபட்டுக்கொள்ளுகிறோம். நாம் அப்படிச் செய்யும் கர்மங்களை பக்தி என்னும் நாரினால் பின்னி அவன் திருவடியில் சாத்தினால் அவன் அத்திருவடிகளாலேயே நம்மைக் காண விரைந்து வந்து விடுவான். ஞானசம்பந்தர் சொல்லுகிறார். இறைவனைத் தந்தையென்றெண்ணி நம்மை சற்புத்திரர்களாகப் பாவிக்க வேண்டுமென்று, பெற்ற பிள்ளைக்கு வழங்காத தந்தையும் உண்டோ? இவர் சிறு குழந்தை, மூன்று வயதில் தேவாரம் பாடி பதினாறும் வயதில் பரமனையே கலந்தவர். உலக அனுபவம் போதாதென்று நாவுக்கரசரைக் கேட்டால் அவர் ''தன் கடன் அடியேனையுந் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்று ஆண்டவன் திருப்பாதங்களில் 'அபயம்'

என்று இறைஞ்சிக் கொண்டிருக்கிறார். அவருக்கே திண்டாடிக் கொண்டிருக்கும் போது நமக்கெங்கே பதில் சொல்லப் போகிறார் என்று ஆலால சுந்தரரிடம் வினயத்துடன் வினவப் போனால் அவர் இறைவனையே தன் காதலுக்குத் தூதனுப்புகிறார். இருந்தாலும் அவருக்கு தைரியம் தான். ஆண்டவனோடு கைலாசத்தில் வசித்த திமிர் அவருக்கு. இவர்கள் கொடுத்த பதில்கள் எல்லாம் சரியானவைதான். இருந்த போதிலும் பலருடைய அபிப்பிராயங் கேட்டு நடக்கவே பழக்கப்பட்டுப் போன மக்கள் இன்னும் சிலரிடம் கேட்க வேண்டும் அதன் பிறகு தான் முடிவுக்கு வரலாம் என்கிறார்கள். தன்னைக் கொல்வதற்காக பாலில் நஞ்சு கலந்து கொடுக்கப்பட்ட போது இது ''கண்ணனுக்கே அர்ப்பணம்'' என்று குடித்து ஏற்கெனவே நீலமாயிருந்த கண்ணன் விக்கிரகத்தை மேலும் நீலமாகச் செய்த மீரா ''முன் செய் தவப் பயனால் முகுந்தன் கிரிதரனே அன்பு நிறைந்திடுமென் அகமுடையானாக வந்தான்'' என்றார். ஆண்டாள் என்ன சொல்வாரோ என்று அவரை அணுகினால் தாமே தம்கையால் அழகுற மாலை தொடுத்து தனக்குச் சாற்றி அழகு பார்த்த பிறகு தான் இறைவனுக்கு அதே மாலையை வழங்குவாராம்! இவர் அணிந்து அழகு பார்க்காத மாலை தனக்கு வேண்டாமென்று கூறி ஆண்டாளைத் தன்னோடு சேர்த்துக் கொண்டார் அந்த ஆண்டாள் தாசன். அழகில் சிறந்த கௌராங்கர் கூட தன் சிஷ்டாஷ்டகத்திலே,

''யுகாயிதம் நிமேஷேண சஷுஷா ப்ராவ்ருஷாயிதம்
ஸூன்யாயிதம் ஜகத் ஸர்வம் கோவிந்த விரஹேணமே''

என்று விரஹதாபத்தால் துடிக்கிறார். 'இந்தத் தாஸிக்கு உன்னைக் காணாத ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகம் போல் தோன்றுகின்றன. கண்ணா! மழைக்காலம் போன்று கண்கள் இடை விடாது நீரைச் சொரிகின்றன. எதற்கும் அழாத நான் உனக்காக சதா அழுது கொண்டிருக்கிறேன். உன்னைக் காணாத குறைதான் என் உள்ளத்தைப் பெரிதும் வாட்டுகிறது. இந்த அநித்ய வாழ்க்கை வேம்பிலும் கசப்பாகத் தோன்றுகிறது. கோவிந்தா! இந்த விரஹ வேதனையை எப்படி உரைப்பேன்!' என்று கண்ணனை நோக்கி அழுகிறார். கடவுளைக் கணவனாக வணங்குதலையே மதுரபாவம் என்கின்றனர்.

இதென்ன! எவ்வளவு சுலபமான வேலை? என்று பலர் எண்ணக் கூடும். கேவலம் மிருக உணர்ச்சிகளுக்கு ஆளாகி



காம வெறியின் பிடியிலே சிக்குண்டு தவிக்கும் மாக்கள் உருவில் திரியும் மக்களின் வேலை போன்றதல்ல இது. அனைத்தும் தூய்மையின் சொரூபம். பிரதி பலனை எதிர்பாராது தன்னை முழுதும் ஆண்டவனுக்கே அர்ப்பணித்து விடுதல் தான் இவ்வழிபாட்டின் தன்மை.

தெய்வம், தெய்வம் என்கிறோமே அவனை அடைதற்கு இது மட்டுமல்ல வழி. அவனை அடையுமுன் நான்கு படிகள் இருக்கின்றன. அந்த நான்கு படிகளையும் தாண்டினால் தான் அந்த ஈசனை அடையலாம். பெரும்பாலும் புறத்தொழிலாலும் சிறுபான்மை அகத்தொழிலாலும் இறைவனை வழிபடுதல் சரியை. ஆலயத்தைக் கூட்டுதல், மெழுகுதல், கோயிலுக்குப் பூமாலை கட்டுதல் என்பவை சரியை. சரியையில் ஞானத்தாலேற்படும் பக்குவத்தால் நுண்ணுணர்வுடையவராய்ப் புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் அருவுருவத் திருமேனியை அதாவது சிவலிங்கத்தை வழிபடல் கிரியை. கிரியையால் ஏற்படும் ஞானத்தால் அறிவு விரிந்து அதன் பின் அகத் தொழிலால்அருவத்திருமேனியை வழிபடுதல் யோகம். பெரும்பாலும் யோகத்தில் நிலைத்தவர்கள் தங்கள் மனதை ஏகாக்ர சித்தப் படுத்தி தியானம் செய்வதையே விழைகின்றனர். அப்படிப்பட்ட யோகாரூடர் மெய்யுணர்வு பெற்றுக் கடவுளைச் சச்சிதானந்தசொரூபியாக, அறிவுரூபமாக வழிபடுதல் ஞானம். இப்படி சிந்தை தெளிந்தார்க்கு, ''சிவனே சீவனுக்கு ஆதாரம்'' ''அவனின்றி ஓரணுவும் அசையாது'' என்பது விளங்கும்.

விடியற் காலத்தில் ப்ரம்மமுஹூர்த்தத்தில் எழுந்து கருணாமூர்த்தியின் கழலிணையில் கண் பதித்து வணங்கும் போது இரு கரங்களையும் குவித்து ஹ்ருதயத்திற்கு முன் வைத்து வணங்குகிறோம். நாம் ஏன் அப்படி வைக்க வேண்டும், அப்படி வைத்து வணங்குவதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா என்று ஆராயின் அவற்றில் ஆழ்ந்து புதைந்து கிடக்கும் அமர ரகஸியம் அம்பலமாகும். ''தாமரை மொட்டுப் போல் குவிக்கப்பெற்று நம் நெஞ்சின் முன் நிலைக்கப்படும் கையானது அந்தக் கையைப்போல் நம் மனமும் குவியப் பெற்று அவ்விருதயமாகிய தாமரையை இறைவனுக்கு அர்ப்பணிக்கிறோம்'' என்பதைக் காட்டி நிற்கின்றது. அந்தத் தாமரையாகிய இருதயத்தை இறைவனுக் களித்தவுடன் இறைவன் அக் கமலத்தில் அமர்ந்து நம் ஆத்ம ரதத்தைச் செலுத்த வழிகாட்டுகிறார். பார்த்தனுக்கு அன்று சாரதியாக வந்தவனை

இன்று நமக்கு சாரதியாக வரச் சொல்ல வேண்டும். மாட்டேன் என்று சொல்லாமல் கட்டாயம் வருவான் அந்தக்கர்மயோகி. அவன் காட்டும் வழியில் நாம் செல்வோம். அச்சமில்லை எமக்கொருநாளும்!

ஆண்டாள், அர்ச்சுனன், மீரா போன்ற பெரியார்களின் வாழ்க்கைகளையும் மற்றும் பல திவ்விய புருஷர்களைப்பற்றி வாசிக்கும் போது நாமும் ஏன் அவர்கள் காலத்தில் பிறக்கவில்லை, ஏன் அவர்களோடு வாழவில்லை என்ற துக்கம் ஏற்படுகிறது. இப்படி இப்படி வாழ்வதனுல் இறைவன் அருள் கட்டாயம் சித்திக்கும் என்றுல் நாம் அத்தகைய வழிகளைப் பின்பற்றுவதைத் தீவிரமாக மேற்கொள்ளவேண்டும்என்று கருதுகிறோம். சிறுகாலம் பின்பற்றுகிறோம். அப்படிப் பின்பற்றும் சிறிது காலத்திற்குள் நமக்கு ஏதாவது சங்கடம் ஏற்படுங்கால் நாம் அது கட்டாயம் நமக்குச் சாதகமாகவே முடியும் என்றெண்ணி அதனை மேலும் தீவிரமாக முயலுகிறோம். ஆனுல் அந்தோ! முடிவு நாம் எதிர்பார்த்ததல்ல. பலன்! அவ்வளவுதான்! நாம் வழிபட்ட இறைவன், அவனை வழிபடத் தூண்டிய திவ்விய புருஷர்கள், அந்த பரம ரகஸியத்தை நமக்கு எடுத்துக் கூறிய புத்தகங்கள் எல்லாவற்றிலும் ஒரு வெறுப்பு. ஹூம்! இதுதான் இன்றைய மக்களின் நிலை. பரிதாபம்! எல்லாம் சிரத்தையற்றதன்மை. நம்மிலிருந்து என்று நம்பிக்கையின்மை விலகுகிறதோ அன்றுதான் நாம் உருப்படுவோம். நம்பிக்கை நம்மில் வேரூன்றி வளர வேண்டும். எந்த விஷயத்தை எடுத்துப் பார்த்தாலும் நமக்கு அதில் நம்பிக்கை இருக்கும் வரைதான் அது நமக்குப் பிரயோசனப்படும். சிறிது நம்பிக்கை தளர்ந்ததோ அன்றே போனது அத்தனையும். உதாரணம் பாருங்கள். சிநேகிதர் ஒருவரிடம் நாம் மிகுந்த நம்பிக்கை வைத்து அவரோடு மிகவும் நெருங்கிப் பழகுகிறோம். நம் வாழ்வில் ஏற்படும் இன்பதுன்பங்கள், ரகஸியங்கள் இவற்றில் அவருடன் பங்கு கொள்ளாதது ஒன்று கூட இருப்பதில்லை. சுருங்கக் கூறின் அவரின்றி நம் வாழ்க்கையே ஓடுவதில்லை. இப்படி இருக்கும் சிநேகிதர் ஒருநாள் நமக்கு ஏதோ ஒரு விடயத்தில் நாம் எதிர்பார்த்த விதமாக நடந்து கொள்ளவில்லை. அவ்வளவுதான்! தப்பபிப்பிராயம், ஒரு சிறு மனத் தாங்கல். நமக்கு அவர் மீதிருந்த அன்பு, வாஞ்சை, மதிப்பு, எல்லாவற்றிற்கும் மேலாக நம்பிக்கை அத்தனையும் கடலின் ஆழம் காணச் சென்ற உப்புப்பொம்மைதான்! இதேமனநிலையைத்தான் இறைவனிடம் நாம் கொண்டிருக்கிறோம். நமது சிற்றறிவுக்கும் குறுகிய மனப்பான்மைக்கும், அவசர புத்திக்கும் ஏற்ப நாம் அச் சர்வேஸ்வரனையும் நமக்கே உரியதான இக் கீழ் நிலைக்கு இழுத்து விடுகிறோம். என்னே நம் மடமை!



அந்த ஆண்டவன் அன்பின் அவைக்களம். ஈஸ்வரன் இன்பத்தின் இருப்பிடம். தெய்வம் தூய்மையின் சொரூபம். இப்படிப்பட்ட இறைவனை நாம் என்றுதான் அடைவோமோ?

---


நல்ல நூல்கள்

## விக்கிரக வழிபாடு

**ஆசிரியர்:- சுவாமி சிவானந்தர் விலை 50 நயா பைசா**

இது உருவ வழிபாட்டின் தொன்மையையும் சிறப்பையும் விளக்குவது. பகுத்தறிவுக்குப் பொருத்தமான முறையில் ஸ்ரீ சுவாமிகள் தரும் விளக்கம் அறிவுக்கு விருந்தாக அமைந்துள்ளது.

## சிவானந்தக் கனிகள்

**ஆசிரியர்;— சுவாமி சிவானந்தர் விலை: 1 ரூபா 50 ந. பை.**

சுவாமி சிவானந்தரின் எண்ணற்ற நூல்களைப் படித்துப் பயன் பெற வாய்ப்பற்றவர்கள் இந் நூலைப் படித்தலால் சுவாமிகளுடைய அருளுரைகளை அறிவதற்குப் பேருதவியாக அமைந்துள்ளது.

குறிப்பு;– மேற்கூறிய இரு நூல்களையும்
**சிவானந்தர் நிலையம், 3, சொக்கப்பநாயக்கர் தெரு மதுரை 1**
என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## இது எது?

**ஆசிரியை சிவ. பிருந்தாதேவி விலை 65 நயா பைசா**

சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் பரதக்கலை பற்றிய விஷயங்களையும் அறமும் அருளும் மணக்க நாடக ரூபத்தில் ஆசிரியை அவர்கள் வழங்கியுள்ளார்கள். சர்க்கரைக்குள் பொதிந்த மருந்து போன்றது.

கிடைக்குமிடம்;—
சகோதரி. சிவ. பிருந்தாதேவி, புதுக்கோட்டை


---

# குரு பக்தி

[சிவானந்த நிவேதிதா இராஜம், க்ரீச்நர்ஸ், உடுமலை]

'ஓம் பிரும்மானந்தம் பரமஸுகதம் கேவலம் ஞானமூர்த்திம்
த்வந்தாதீதம் ககனஸதிரசம் தத்வமஸ்யாதி லெக்ஷியம்
ஏகம் நித்யம் விமலமசலம் ஸர்வதீ ஸாக்ஷி பூதம்
பாவாதீதம் திரிகுணரகிதம் ஸத்குரும் தம் நமாமி'

குரு என்ற சொல்லுக்கு இருளை நீக்கி ஒளி கொடுப்பவர் என்று பொருள் படுகிறது. ஆனால் இச் சொல்லை, நாம் உலகில் கல்வி கற்பிக்கும் ஆசானுக்கும் 'வித்யாகுரு' எனக் குறிப்பிடுகிறோம். கல்வி கற்பிக்கும் ஆசான் நமக்கு ஓரளவிற்கு மட்டும் கல்வி கற்பிக்கின்றான். ஆத்மீகத் துறையில் நமக்குப் புகுத்தப்படும் கல்வி வேறானது. இக் கல்வி புகட்ட வல்ல குருவின் அறிவும் வேறானது. ஆத்மீகத் துறையில் நாம் பெறும் அறிவு பூரணத்துவம் பெற்ற முழுஞானியாலேதான் புகட்ட முடியும். இந்த ஆத்மீகம் என்ற வார்த்தையை மக்கள் கேட்டவுடன், இது வேதாந்தம் என்றும், தங்கள் தினசரி வாழ்விற்குச் சம்பந்தமில்லை யென்றும் எண்ணுகிறார்கள். ஆனால் வாழ்க்கைச் சக்கரத்தில் மனிதன் இன்பத்தையே தனக்கு நிலையெனக் கருதி, ஏமாற்ற மடைந்து துன்பங்களும் ஏமாற்றமும் கண்ட பின்புதான் நிலையான இன்பத்தை அடைய வேண்டுமென உணர்கிறான். இந்த நிலையான இன்பத்தை ஒவ்வொருவரும் ஒரு ஸத் குருவின் உதவியால்தான் அவசியம் அடைய வேண்டியுள்ளது.

அருணகிரியாருக்கு முருகனே குருவாக வந்து காட்சி அளிப்பதால்தான் கந்தரனுபூதியில் குருநாதனாய் வர

"... ...கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

என்று போற்றிப் பாடிப் பரவச நிலையடைகிறார். அருணகிரி யடைந்த குருவினைப் போல் நாமும் ஒரு ஸத் குருவின் உதவியை ஆத்ம அறிவு வளர அடைய வேண்டுமென்பது கூறவும் வேண்டுமோ?



குருவினை ஒருவன் அடைந்த பின்னர் அவனுக்கு அக் குருவேதான் ஈசுவரனாக விளங்குவார். அத்தகைய குருவிற்கும் ஈசுவரனுக்கும் சிறிதும் வித்தியாசமேயில்லை. ஆத்மீகத் துறையில் உயர்ந்த நிலையில் சேர்ப்பதே, இப்பெரியார்களின் சிறப்பான நோக்கமாகும். குருவானவர் தன்னிடம் வந்தடைந்த அன்பர்களின் மனநிலைகளையும், அவர்களது சாதனை முறைகளையும் அறிந்து கொள்கிறார். பிறகு அவரவர்களின் முறைகளுக்குத் தக்கபடி தடைகளை நீக்கி முன்னேறச் செய்கின்றார். ஒவ்வொரு வரிடமும் கர்மா, பக்தி, ஞானம் என்ற மூன்றினுள் எந்த மார்க்கம் காணப்படுகிறதோ அதே மார்க்கத்தில் அவர்கட்குக் குரு உபதேசிக்கின்றார்.

ஆகவே இம்மாதிரியான ஞான குருவைப் பெற்றவர்கள் அவரைத் தந்தையாகவும் தாயாகவும் பேணி அவர்கள் வழி நிற்றல் வேண்டும்.

குருவை யடைந்தவர்கள் குருவினிடமும் அவர் வார்த்தையிலும் பூரண நம்பிக்கை வைத்தல் வேண்டும். பின்னர் அவர்கட்குப் பணிவுடன் தொண்டு புரிய வேண்டும். அடுத்தபடியாகக் குருவின் வார்த்தைகளைப் பரிபாலிக்க வேண்டும்.

குருபக்தியைப் பற்றிச் சுவாமி சிவானந்தர், 'குருபக்தியில்லாதவன் நறுமணமற்ற பூவையும், நீரற்ற கிணற்றையும், பால் தராத பசுவையும், உயிரில்லா உடம்பையும் போலாவான்' என குருவின் அவசியத்தை ஈண்டு வலியுறுத்துகின்றார்.

குருவிற்குத் தொண்டு செய்கிறவன் அகில உலகிற்கும் தொண்டு செய்தவனாகிறான். குருவைத் திருப்தி செய்கிறவன் இஷ்ட தெய்வத்தைத் திருப்தி செய்கிறான். குருவின் அருளைப் பெற்றவன் மரணத்தை வெல்கிறான். குரு சேவையால் அறிவு மலருகிறது. இந்தக் கலியுகத்தில் கடவுளை அடைவதற்கான சீரியபாதை குரு சேவையேயாகும். குருவிற்குப் புரியும் பணி சம்சாரசாகரத்தைக் கடப்பதற்கு ஓர் ஓடமாகும். குருதான் பிரம்மா, விஷ்ணு, சிவன், பிரும்மன்.

குருவை யடைந்து அவர் சொற்படி தன் வாழ்வினை

வகுத்துக் கொண்ட ஒருவனுக்கு எந்நாளும் தாழ்வு இல்லை. அவன் பெறுதர்க்கரிய ஒளியைப் பெறுகின்றான். கதிரவன் முன் பனிபோல் தீர்த்து வைக்கும் பரமகுருவினை ஒவ்வொருவரும் அடைந்து அவரிடம் சரணாகதியடைந்தால், வள்ளுவன் வாக்கிற் கிணங்க

''இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசு அறி காட்சியவர்க்கு'' என்ற கருத்திற் கொப்ப

இருள் மறைந்து அழியாத நிலையான இன்பத்தைப் பெற்று உபமன்யு, ஆருணி, போன்ற குருபக்தி மிகுந்த சீடர்களாக இவ்வுலகில் வாழ்வீர்களாக!

குருமார்களின் நல்லாசிகளைப் பெற அனைவரும் எழுமின்! விழிமின்!!

## விவேகானந்தர் அருள்வாக்கு

உலகத்தின் இரகசியங்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக் கூடிய சக்தியைப் பெற்றால் உலகம் அதன் இரகசியங்களை நமக்களிக்கத் தயாராக இருக்கிறது. அக் கதவுகளைத் திறக்கக் கூடிய வலிமையை மாத்திரம் நாம் பெற வேண்டும். இவ் வலிமையை நமக்களிக்கக் கூடியது மன ஒருமை ஒன்றுதான்.

நம் எண்ணங்களே நம் தன்மையை உண்டாக்கியிருக்கின்றன. இரும்பில் சம்மட்டி அடிக்கும் ஒவ்வொரு அடியும் அதன் உருவத்தைத் தீர்மானம் செய்வதுபோல நம் ஒவ்வொரு எண்ணமும் நம் தன்மையைத் தீர்மானம் செய்கிறது. வார்த்தைகள் அவ்வளவு முக்கியமானவையல்ல. எண்ணங்களே அதிக முக்கியமானவை. அவற்றிற்கே ஆழ்ந்த சக்தியுண்டு. நெடுங்காலத்திற்குப் பின் நேரக் கூடியதை அவைதாம் தீர்மானம் செய்கின்றன. ஆதலால் நாம் நினைக்கும் நினைவுகளைப் பற்றி அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.



# மங்கையர்க் கழகு.

திருமதி. ந. வள்ளிநாயகி

உன்னுடைய இல்லறவாழ்க்கையில் எப்போதும் கடவுளும் மகாத்மாக்களும்மற்றவர்களும்ஆசீர்வதிக்கும்படியாகப் பூமி தேவியைப்போல் அதிகபொறுமையுள்ளவளாகவும்,இலக்குமி தேவியைப் போல் சுமங்கலிகளுக்கு ஏற்பட்ட அடையாளங்களுடன் அலங்காரமாகவும், சரஸ்வதி தேவியைப் போல் கல்வியில் பிரியமுள்ள வளாகவும்,பார்வதி தேவியைப் போல் சமயோசித அறிவில் தேர்ந்தவளாகவும் இருந்து நீ வீட்டிற்கு ஓர் விளக்காகப் பிரகாசிப்பாய்.

இந்தப் பிறவியிலும் அதன் பின்னும் குற்றவாளியாகாமல் தப்பவேண்டுமானால் நீ எப்போதும் சுசியாக விளங்க வேண்டும். சுத்தம் சோறு போடும். எச்சில் இரக்கவைக்கும். நீ கன்னியா யிருக்கும்போது உன் தாய்வீட்டில் கெட்ட பெயர் எடாமல்உன்காரியங்களில் கவனமும் மரியாதை யுள்ளவளாகவும் நடந்து பழகிக் கொண்டால், அப்பழக்கம் கணவன் வீட்டிலும் உனக்கு நல்ல பெயரைத் தந்து மேன்மை யடையச் செய்யும். பெரியோர்களின் மனம் மகிழ்ச்சியுறும்படி பணிவிடை செய்ய நீ தயாராக இரு. எக்காலத்தும் எவருக்கும் அன்புள்ளவளாய் நடந்துகொள். ''பிறருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து ஆதரிக்கவே, கடவுள் உன்னைப் பெண் மணியாக உலகத்தில் தோற்று வித்தார் என்பதை மறந்து விடாதே''. உலகத்தில் மங்கையர் தோன்றியது அனைவரையும் மாதாவைப் போல் ஆதரிக்கவேயாகும் என்பதையும் அறிந்துகொள்.

உன்நாயகன் மனத்திருப்தியே நீ உலகில் பெறவேண்டிய பாக்கியங்களில் சிறந்த பாக்கியமாகும். அதற்கேற்றபடி உன் நடவடிக்கை பொருந்தியிருக்கிறதா என்று கவனித்துப்பார். மாமன் மாமி முதலிய பெரியோர்களை மகிழ்விப்பதே உன் கணவனைத் திருப்திப்படுத்தும் நற் செய்கையாகும்.

பெற்றோர்களுக்கு இகழ்ச்சியை உண்டுபண்ணும் பெண் இருப்பதைக் காட்டிலும் இறப்பதே மேலாகும். நீ பிறந்த வீட்டார்கள் எத்தகைய ஐசுவரிய முடையவர்களாயிருப்பினும் அதனால் உனக்குக் கௌரவமில்லை. உன் கணவன் வீட்டின் சிறப்பே உனக்குக் கௌரவமாகும்.

அது உன் நடத்தையால்தான் என்பது உன்மனதிலிருக்க வேண்டும். உன்நடத்தையால் உனக்குக் கிடைக்கும் பெருமை வேறு எதனுலும் கிடையாது. பெண்களால் குடும்பம் பெருகுவது முண்டு. பெண்களால் குடும்பம் சின்ன பின்னப் பட்டுச் சீரழிந்து போவதும் உண்டு. ஆக்குகிறதும் பெண் தான் அழிக்கிறதும் பெண் தான்.

உன் தாய்வீட்டில் உனக்குக் கொடுக்கும் சீர்வரிசைகளுக்குக் கௌரவ மதிகமென நீ நினைப்பதைக் காட்டிலும் உன் கணவன் வீட்டில் நீ எடுக்கும் நல்ல பெயரால் உன் பிறந்த வீட்டிற்கு நீ கொடுக்கும் கௌரவம் மிகச் சிறந்ததாகும் என நினை. உனக்கு உத்தம குணங்களில்லாவிடில் அந்தச்சீர்வரிசைகளால் என்ன பிரயோசனம்? உலகில் உன் கணவனுக்குப் பின்பு மற்ற ஆண்மக்கள் அனைவரையும் உன் சகோதரர்களாகவும், உன் நடவடிக்கைகளால் பிறர் உன்னைச் சகோதரியாக எண்ணும் படியும் உலகில் இரு. உன் கணவனைக் கடவுளாகப்பாவி. கணவனின் சகோதரர்களை உன்சகோதரர்களாக எண்ணி நட.

மாமன் மாமியர்களை உன் மாதா பிதாக்களாக நினை. அப்போதுதான் உன்மனது களங்கமற்றதாகி நல்லவளென்ற பெயரெடுத்து அதனுல் நீஇகபர சௌக்கியங்களையடைவாய்.

## விவேகானந்தர் அருள்வாக்கு

மனது துக்க சாகரத்தில் ஆழ்ந்து சுற்றிலும் கஷ்டங்கள் என்ற புயற்காற்று அடித்துக் கொண்டிருக்க உள்ளத்திலிருந்த நம்பிக்கையும் தைரியமும் அகன்று வாழ்க்கையே அந்தகாரமாய்த்தோன்றும். இம்மாதிரி சந்தர்ப்பங்களில்தான் ஆத்மீக ஒளி பிரகாசிக்கிறது.



# கடோபநிஷதக் கருத்து

(முன் தொடர்ச்சி)

— சுவாமி சிவானந்தர் —

### பிரம்ம வித்தையின் மகிமை

31. ஆன்மாவை ஆராய்ந்து விளக்கக் கூடிய மனிதன் ஆச்சரியமானவனே. திறமை வாய்ந்த ஆசிரியராற் கற்பிக்கப்பட்ட பொழுது ஆன்மாவைப் புரிந்து கொள்பவன் ஆச்சரியமானவனே.

32. பிரம்ம வித்தை உறுபல அற்புதமான விஞ்ஞானம். இதுவே விஞ்ஞானங்களுக்குள் விஞ்ஞானம்.

33. எவ் விஞ்ஞானத்தை அறிந்ததும் மற்றெல்லா விஞ்ஞானங்களும் அறிந்ததாகின்றனவோ, அத் தலைசிறந்த ஆன்மீக விஞ்ஞானம் யாது? அது பரவித்தை அல்லது பிரம்ம வித்தை; அதனுல் அழிவற்ற ஆத்மன் அறியப்படுகிறது.

34. பிரம்ம வித்தையைக் கற்பிக்கும் ஆசிரியர் ஆச்சரியமானவராயிருக்க வேண்டும். சிஷ்யனுங் கூட ஆச்சரியமானவனுயிருக்க வேண்டும்.

35. பிரம்ம ஞானிகளும் தகுதி வாய்ந்த சாதகர்களும் இவ்வுலகில் மிக மிக அரிதானவர்களே.

36. யார் சாதன சதுட்டயம் பொருந்தியவனே அவன் ஞான யோகப் பாதையிற் செல்வதற்கு யோக்கியதை யுடையவனுயிருக்கிறுன்.

37. இவ்வாத்மனைப் பற்றிச் செவி கொண்டு கடவுளை நாடுகின்ற ஆயிரக் கணக்கானவர்களில் யாரோ ஒருவர் மட்டுமே ஆத்மனை யறிந்தவராகிறுர். ஆத்ம ஞானியாகிறுர்.

38. இவ்வாத்மன் ஞானியல்லாத கீழ்த்தரமானவரால் கற்பிக்கப்பட்டபொழுதுசுலபமாகஅறிந்துகொள்ளமுடியாது

39. இவ்வாத்மன் வாதித்தலினுலோ அல்லதுபகுத்தறிதலினுலோ அடையப் பட முடியாது; ஏனெனின், அதுஅதீதமானது;பகுத்தறிவினதும் நுண்ணறிவினதும் அடையும் ஆற்றலுக்கப்பாற்பட்டது.

40. நுண்ணறிவு கால,தேச காரணத்தில் வரையறைப்பட்ட ஓர் எல்லைக்குட்பட்ட கருவியே. வாதிப்பதனுல் மாத்திரம் ஒரு முடிவான, நியதமான சித்தாந்தத்திற்கு யாம் வர முடியாது.

41. கீழ்த்தர நுண்ணறிவுள்ள மனிதன் மேம்பட்ட அறிவுள்ள மனிதனுல் தோற்கடிக்கப்படுவான்.

42. வாதிப்பது வெறுஞ் சொல் மாய வித்தையே. அது புத்திப் பயிற்சி விளையாட்டும் வாய்ச் சண்டையுமே.

43. யார் தன் வாழ்நாளை வெறும் நியாயவாதத்திற் கழிக்கிருனே அவன் இருளும் அறியாமையுமாகிய அடர்ந்த கானகத்தில் அகப்படுத்தப்படுகிருன்.

44. வாதிடுவதை ஒழிக. அமைதி உண்ணேக்குகை, தியானம் முதலிய இயல்புகளுள்ளவனுகுக.

45. இவ்வாத்மன் அமைதியான தியானத்தினுல் மட்டும் அடையப் படக்கூடியது.

46. பிரம்ம ஞானம் அல்லது ஆன்ம அறிவு வெறும் பகுத்தறிதலால் அல்லது வாதத்தாற் பெற முடியாது. ஒருவர் பிரம்ம உணர்வு நிலையை ஆன்மீக அனுபவத்தால் அல்லது நேர் உள்ளுணர்வுக் காட்சியால் உணர்ந்து எய்தப் பெற வேண்டும்.

47. பிரம்மம் பேதம் நோக்காத, தன்னிறைவுப் பேறடைந்த ஆசிரியராற் கற்பிக்கப்படும் பொழுது சுலபமாக ஓர்ந்தறிந்து கைவரப்பெறுகிறது.

48. நித்தியப் பொருள் அநித்தியப் பொருட்களாற் பெறப்படுவதில்லை.



49. நிலையான நித்தியப் பொருள் அல்லது தலை சிறந்த ஆத்ம பொக்கிஷம் நிலையற்றதினுல்-அதாவது தன்னியல்பில் நிலையாமையானதாயிருக்கும் கர்மத்தால்-அடையப்பட முடியாது.

50. ஹிரண்யகர்ப்பனின் நிலைகூட பரப்பிரம்மத்தில் நிலையான வாழ்வுடன் ஒப்பிடப்படும்பொழுது மதிப்பற்றது.

51. இவ் ஆத்மன் மிக நுட்பமானதாயும் உள்ளுறைகின்றதாயுமிருக்கிறது. அது இருதய குகையில் மறைந்திருக்கிறது. ஆகையால் இவ்வாத்மனை அறிவது கடினம்.

52. அறிவுள்ள மனிதன் தன் மனதைப் புறப்பொருட்களிலிருந்து பின்னிழுத்துக் கொண்டு உள்ளான்மாவிற்றியானிப்பதின் மூலம் இவ்வாத்மனை அடைந்து இன்ப துன்பமிரண்டையும் துறக்கிருன்.

53. இவ்வாத்மன் இன்பதுன்பம்,மகிழ்ச்சிகவர்ச்சி முதலியவற்றிற்கு அப்பாற்பட்டது. அது பேரின்பத்தின் ஒரு திருவுரு. அது சச்சிதானந்த சுவரூபம்.

54. இன்பமும் துன்பமும்,மகிழ்ச்சியும் கவற்சியும் மன மாற்றங்கள் மாத்திரமே.

## உபநிஷத சாதனை

55. அறிவுள்ள ரிஷி ஆத்மனைத் தியானிப்பதன் மூலம் காண்பதற்கு அருமையான, நிலை காணலாகாத, இருதய குகையில் மறைந்திருக்கும், பாதாளத்தில் வசிக்கும், நுண்மதியிற்றங்கும் தொன்மையோனை அறிந்து இன்பதுன்பத்தையும், மகிழ்ச்சி கவர்ச்சியையும் துறக்கிருர்.

56. நாடுபவன் தன் தகுதியும் திறமையும் வாய்ந்த ஆசிரியரிடமிருந்து ஆத்மனைப்பற்றிய அனைத்தையும் கவனித்துக்கேட்டு அதன் உண்மை இயல்பைப் புரிந்து கொள்கிருன்.

57. அவன் அப்போது ஆத்மனை நித்யா நித்ய வஸ்து விவேகமூலம் உடல் உளத்திலிருந்து பிரித்துத் தியானித்து அதனை நேர்உள்ளுணர்வுக்காட்சி மூலம் எய்தப்பெறுகிருன்.

58. இவ்வுலகம் தர்மம் அல்லது செம்மையால் நிலை கொள்கிறது. பிரம்மமே தர்மங்கள் அனைத்தினதும் உண்மையான மையம்.

59. ஏன் ஒரு மனிதன் செம்மை வாழ்வு நடாத்துகிறான்? அவன் பிரம்மத்தை அல்லது ஆன்மாவை அடைய விரும்புவதனால் அதனில் மாத்திரமே அவன் உண்மையாக மகிழ்ச்சி யடைய முடியும்.

60. பிரம்மத்தின் சுவரூபம் அல்லது சத்து பேரின்பமே.

61. புலனுகர்ச்சி இன்பம் நரம்புகளின் உராய்தல் அல்லது கிளர்ச்சியால் ஏற்பட்ட நிலையற்ற புலனுணர்வுமட்டுமே. இங்கு எதிர்த் தாக்கல் உண்டு.

62. பிரம்ம நிலை சர்வ பரிபூரணமானது, சுஜாதிய சுவகதபேதமின்றியது. (ஒரே சீராயுள்ளது), நித்தியமானது. அது ஒரு முழுமையான நிர்விகார நிலை.

63. பிரம்மம் அறத்தையும் மறத்தையும் விட வேறானது, காரண காரியத்தை விட வேறானது, சிறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் விட வேறானது.

64. அறமும் மறமும் இறந்த காலமும் எதிர்காலமும் மனப்படைப்புகள் மட்டுமே.

65. காலம் என்பது ஒரு மன நிலையே. காலமும் ஒரு மனப் படைப்பே.

66. ஈஸ்வரன் அல்லது இறைவனில் உடனிகழ்ச்சிக் காட்சி உண்டு. அனைத்தும் ''நிகழ்காலம்'' மட்டுமே. அனைத்தும் ''இப்போது'' மட்டுமே.

67. பிரம்மம் நித்தியம். அது காலத்தைக் கடந்தது.

68. எவ் அடைவைப்பற்றி வேதங்கள் அனைத்தும் பகர்கின்றனவோ, எதைப்பற்றித் தபசுகள் பறை சாற்றுகின்றனவோ, மேலும் எதை விரும்பி நாடுபவர்கள் பிரமசரிய வாழ்வு நடாத்துகிறார்களோ அவ் அடைவே ஓம்.

69. தவத்தினதும் பிரமசரியத்தினதும் பயிற்சி பிரமானுபூதிக்கு நடாத்துகிறது.



# சிந்தனைச் சிறப்பு

M. அரவாண்டி M. A.

நாகரிகமென்றால் என்னவென்றே மனிதனுக்கு அன்று தெரியாது. எதை எப்படிச் செய்ய வேண்டும் என்ற வரை முறைகள் அன்று அவனுக்குக் கிடையாது. ஆனாலுங் கூட அவனுக்கு இயற்கைச் சாதனங்கள் ஓரளவுக்கு உதவி புரிந்தன. அதன் பயனாக அவனை அவன் உயர்த்திக் கொள்ளும் நீர்மையைப் பெற்றான். எனவே, ஆடையின்றி வாழ்ந்த காலத்தில் இல்லாத வெட்கம், அரையாடைக்கு உயர்ந்த போது அரும்பத் தலைப்பட்டது. உடலுழைப்பை மட்டும் உணர்ந்திருந்தவன் மூளை உழைப்பையும் உணரத் தலைப்பட்டான். அதன் பயனாக உடலுழைப்பிலிருந்த தீவிரப் பற்று நீங்கி அவனது முயற்சி மூளை உழைப்பிலேயே கால் கொண்டது.

படிப்படியாய் வளரத் தலைப்பட்டான்; மனித சமுதாயத்திற் கென்று பல பண்புகளைப் படைத்தான்; 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற சில கட்டுப்பாடுகளையும், வரையறைகளையும் வகுத்தான். அவற்றைச் செயல்படுத்தத் துணை புரிந்தன சூழ் நிலைகள், சுற்றுப் புறங்கள். சிறு வளர்ச்சியில் அமைதி யடையாது மேலும் மேலும் முயன்றான்.

அந்த விடாமுயற்சியும், உள்ளப் பாங்கும், தீவிர நோக்கும், இடையறா உழைப்பும், ஆழ்ந்த சிந்தனையும் ஆகிய இவைகளே இன்றைய நாகரிகத்தை நமக்கு அளித்துள்ளன.

ஆனால் ஒன்று எண்ண வேண்டும்படி உள்ளது. வளரும் நாகரிகம், பூசல்களை வளர்க்க வேண்டும் என்றுஅவன் எண்ணினானா? இல்லை. மாறாக உள்ளத் தொடர்புக்கும், உணர்வுப் பெருக்கினுக்கும் ஊட்டம் கொடுத்து உலகைச் சிறிதாக்கி, எட்டுத்திக்கும் பறந்து மனிதர்களை மனிதக்கண்ணோடு கண்டு மனிதர்களிலே தெய்வங்களை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனைக்குவியல்கள் அவனது எண்ணத்திரைகளிலே உருண்டோடின. ஆயினும் அவன் எண்ணியதில் நூறில் ஒரு பாகம்

கூட வெற்றி கண்டதாய்த் தெரியவில்லை. ஏன்? மிகவும் சிந்திக்க வேண்டியதொரு செய்தி.

அன்றிலிருந்து இன்றுவரை மனிதனுடைய அறிவால், சிந்தனையால், ஆற்றலால் தோன்றிய இன்பத் தேனாறுகள் ஏராளம். ஆனால் எதிர்பாராத காட்டாறுகள் பல ஆங்காங்கே பெருக்கெடுத்து பண்படுத்தப்பட்ட கழனிகளை மடுவும், பள்ளமுமாய்ச் செய்து மனித வாழ்விலே எண்ணற்ற இடையூறுகளை எழுப்பி விடுகின்றன; எழுப்பி விட்டன. வானிலே பறக்கக் கற்றுக் கெண்டான் மனிதன்; அண்ட பாதாளங்களை அளக்கக் கற்றுக்கொண்டான்; அணுவை ஆயக் கற்றுக் கொண்டான்; நாடு நகரங்களை அண்மையிலே கொணர்ந்து நிறுத்தி விட்டான்; ஆயிரமாயிரம் கல் தொலைவுகட்கப்பால் உள்ள இடங்களையும் நொடிப் பொழுதில் எட்டிப் பிடிக்க வழி வகுத்துக் கொண்டான்; பற்றாக்குறைக்கு விண்ணுலகையும் எட்டிப் பிடித்துள்ளான். இவ்வளவும் வளர்ந்தபின், இவ்வளவையும் வளர்த்தபின் அவனது அன்றாட வாழ்வில் மனநிறைவுண்டா? அமைதியுண்டா? என்றவினாக்களை எழுப்பி விடை காணும் போதுதான் அவனது சிந்தனைகள் வெற்றி காண எண்ணியதில் நூறில் ஒரு பகுதியும் வெற்றி காண இயலவில்லையே என்ற ஏக்கம் தலைப்படுகின்றது.

ஒரு பெரிய நகர வீதியில் காலை ஒன்பதரை மணியளவில், அலுவலகங்கட்கும், தொழிற்சாலைகட்கும் செல்லும் மனிதர்களைக் கண்ணுற்றால் அவர்களுள் ஒருவர் முகத்திலேனும் உண்மையான அமைதியும், உறுதியான நம்பிக்கையும் நிலவலரிது. எவ்வளவோ வழிவகைகளை வகுத்துக் கொடுத்த மனித சிந்தனை உறுதியையும் நம்பிக்கையையும் வகுத்துக் கொடுக்காமலில்லை. ஆனால் ‘வழிவகைகள்’ வளர்ந்த வேகத்தில் ‘மனித தத்துவங்கள்’ வளராமற் போய், இத்தகைய மேடு பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன, இந்த மேடு பள்ளங்களைக் களைந்து அமைதியும் உறுதியும் வாய்க்க வல்ல சூழ்நிலைகளை உருவாக்க வேண்டியது சிந்தனையாளர்களின் கடப்பாடாகும்.

இந்தச் சிந்தனைக்கு அன்றே மனிதன் அடித்தளம் இட்டு விட்டான். அந்த அடித்தளத்தைப் பெருக்கி மாட மாளிகைகள் போன்ற எண்ணக் குவியல்களையும், செயற் செல்வங்களினையும் உருவாக்கினால் நமது திட்டம் நிறைவேறும்; உலகு உண்மை அமைதியோடு வாழ வழியுண்டு. அந்த அடித்தளம்



தான் யாது என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று.

எவ்வளவு சிந்தனைகளைக் கொண்டாலும் மனிதன் ‘மனிதன் தானே’! அவனுக்கு அப்பாற்பட்டு அணுவுக்கு அணுவாய், தொலைவுக்குத் தொலைவாய், அண்டத்துக்கு அண்டமாய், உள்ள ஒரு கருப்பொருளை அவன் கண்டான். அந்த ‘இறை’ இன்பத்தையும் துன்பத்தையும் கடந்த ஒரு நிலையில் தோற்றமளிப்பதை உணர்ந்தான். தனக்குத் துன்பம் நேரும் போதும் அமைதியை இழந்த போதும் அந்த ஒரு அண்டப் பொருளைஒரு கணம் எண்ணிக்கண்ணீர் வடித்து ‘ஏழையேன், பாவியேன், நாயேன், செய்த குற்றங்களைப் பொறுத்து அமைதி அருள்வாய் இறைவா’ என்று வேண்டியும் ‘அடித்தது போது மணைத்திடல் வேண்டும்’ எனக் கசிந்து உருகியும் தெளிவு பெற்றான். நாகரிகம் பேசிக்கொண்டுள்ள இன்றைய உலகில் அந்த அடித்தளத்தைப் பெருக்க மறந்து விட்டோம்; பண்பட்ட நிலையைப் படைத்து ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற சொற்றொடரை வாழ்க்கையிலே செயலாக்கும் பான்மையையும் இழந்து விட்டோம்.

ஆனால் நம்பிக்கையிலே வாழ வேண்டிய மனிதன் நம்பிக்கையை இழந்து விடக் கூடாது; மறந்து விடக் கூடாது. உலகமே ஒரு குடும்பமாய்க் காணும் பெற்றியைப் பெற நம்பிக்கை கொண்டு சிந்தனையைத் தெளிவுபடுத்தி ஒரு நல்ல நிலத்தைச் சீர்திருத்தப் பாடுபட வேண்டும். ‘நிலம் நல்ல நிலமாக அமையா விட்டால் பயிர் செழித்து வர இயலாது’ என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறுவது போல ஒவ்வொருவரும் அந்த நல்ல நிலத்தைச் சீர்திருத்தும் முயற்சியில் ஈடுபட்டால் தான் வளர்ந்துள்ள நாகரிகத்திலே அமைதியாக வாழ வழியுண்டு. அதற்கு ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய சிந்தனைகள்.

> [1] அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
> மக்கட்பண் பில்லாதவர்

என்ற குறள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஊன்றிப் பாய்ந்து ஒவ்வொருவருடைய பண்பும் நாளுக்கு நாள், திங்களுக்குத் திங்கள், ஆண்டுக்கு ஆண்டு எந்த அளவு உயர்ந்துள்ளது என்பதைக் கணக்கிட்டு அன்பிலே, அருளிலே வளர்ந்துள்ளோமா என்று உணரத் தலைப்படல் வேண்டும். மறைவாக நமக்குள்

பழங்கதைகள் பேசிக்கொண்டு முன்னோர்களைச் சுட்டிக்காண்பித்து வாளாவிருக்காமல், நாம் 'வளரும் நிலையை' எட்டிப் பிடிக்க வேண்டும்.

[2] பிறக்கும் போது நாம் என்ன சாதி என்று அறியாத குழந்தைக்குச் சாதிப் பூசல்களைச் சுட்டிக்காட்டி, சாதியை வளர்க்காமல் 'சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்' என்ற பண்பாடு மூலை முடுக்குகளெல்லாம் பரவி, உலகமே ஒரு குடும்பம் என்ற நிலை ஏற்படல் வேண்டும். சாதிப் பூசல்கள் பெருகியுள்ள இன்றைய நிலையில் ஒவ்வொரு மனிதனும் முக்கியமாகச் செய்ய வேண்டிய கடமை இது. இந்தக் 'காக்கைக் குருவி எங்கள் சாதி' என்ற பண்பு வளரும் நிலையில் தான் நாம் வளர்ந்தோம் என்ற பெருமை நமக்கு உண்டு.

[3] எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாம் கடந்த இறையை உள்ளத்திலே ஏற்றி வழிபடும் நிலை பெருக வேண்டும். உள்ளத்தைத் தூய்மைப் படுத்தி ஒழுக்கத்தைப் பெருக்கி விழுப்பம் தரும் பாங்கினை உணர ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். 'எண்குணத்தானின் தாளை வணங்காத் தலை'யும் ஒரு தலையா, என்ற ஒரு உணர்வு பெருக்கெடுத்து நமது வாழ்க்கையிலே குறுக்கிடும் சூது, வஞ்சனை, பொறாமை, பூசல் போன்ற தீக்குணங்களைக் கழித்து நன்றியுணர்வு, நேர்கொண்ட பார்வை, பரந்த எண்ணம், விரிந்த நோக்குபோன்ற நற்குணங்களைக் கூட்டிப் பெருக்கும் நிலை உயர வேண்டும்.

மேற்கூறிய கட்டுப்பாடுகள் என்ற வட்டத்தை இட்டு அந்த வட்டத்தைத் தாண்டாமல் பாதுகாத்துக் கொள்ளும் மனிதன் மனிதருள் தெய்வமாய் விளங்க வழியுண்டு. அந்த நிலையில்தான் உடலினால் வாழும் வாழ்க்கை போய் உள்ளத்தால் வாழும் வாழ்க்கை பெருகும்; அப்போதுதான் உணர்ச்சியால் மட்டும் வாழும் வாழ்க்கை நீங்கி அறிவினால் வாழ்கின்ற வாழ்க்கை பெருகும். மனிதனுக்கே இயல்பான காட்டுமிராண்டிக் குணங்கள் நீங்கி மனிதத் தன்மை வளரும். மனிதன் அன்றிலிருந்து இன்று வரை உயர்ந்ததன் பயன் கிட்டும். நடமாடும் மனித தெய்வங்களைப் பார்த்து 'இறை' மகிழும். அந்நிலையில் தான் நாகரிகமற்றுக் கிடந்த மனிதன் புதிய புதிய கருவிகளைப் பெருக்கியதன் சிறப்பு விளங்கும். அவன் சாதிக்க எண்ணியதின் விளைவு சாதகமாகும். இன்றேல் எவ்வளவு அறிவியற் கூறுகள் வளர்ந்தும் பயனில்லை.



பெரிய இயந்திரங்கள் பெருகியும் பயனில்லை.

நல்லவையே எண்ணுவோம்;
நல்லவையே நாடுவோம்;
நல்லவையே செய்வோம்.

''அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்திலார்
அன்பே சிவமாவது யாருந் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே''
— திருமந்திரம்

வாழ்க அருள்நெறி! வளர்க சைவம்!! வளர்க்கும் பெருடையார் வாழி; வளர்க்கத் தூண்டும் அறிஞர்கள் வாழி; வளர்க்கப் பாடுபடும் அன்புள்ளங்கள் வாழி.

## ஸ்ரீ விவேகானந்தர் அருள் வாக்கு

மஹா வீரராகிய ஆஞ்சநேயரையே உங்கள் இலட்சியமாகக் கொள்ளுங்கள். அவர் வாழ்க்கை முழுவதும் இராம சேவையில் கழிக்கப்பட்டது. சேவைக்கு இலட்சியமாக இருக்கும் இவரை ஆதாரமாக வைத்துக்கொண்டு உங்கள் வாழ்க்கையை நடத்துங்கள். சேவா இலட்சியத்தை மேற்கொண்டால் மற்ற அருங்குணங்கள் அனைத்தும் தாமே நம் வாழ்க்கையில் பரிணமிக்கும். குருவின் உபதேசங்களை முற்றிலுமேற்று அதன்படி ஒழுகுதலும் பிரம்மச்சரியத்தை வழுவாது கடைப்பிடித்தலுமே எவ்விஷயத்திலும் வெற்றிபெறும் இரகசியமாகும்.

*

உண்ணும்போதும் உறங்கும்போதும் உடுத்தும்போதும் அல்லது பாடும் போதும், விளையாடும் போதும் அல்லது இன்பத்திலும் துன்பத்திலும், எப்பொழுதும் உயர்ந்த ஆண்மையைக் கடைப்பிடியுங்கள். எச்சமயத்தும் எந்த விதமான பலவீனமும் உங்கள் மனதில் புக விடாதீர்கள்; அனுமானை நினைத்துக் கொள்ளுங்கள்; பராசக்தியை மனதில் வையுங்கள். உங்கள் பலவீனங்கள் கோழைத்தனங்கள் யாவும் மறையக்காண்பீர்கள்.

# ஆனந்தமாயி அம்மையிடம் அன்பர்கள் சம்பாஷணை

காசி, ஆகஸ்ற்று *18*, 1948.

**வினா;—** எப்படி ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தியானிப்பது முழுமையைத் தியானிப்பதற்கு வழிகாட்டும். ஒருவர் ஒரு கூற்றில் மட்டுமே மனதை முற்றாக ஒருமுகப்படுத்தலாம். ஒருவர் தியானத்திற் கவரப்பட்டபோது தன்னறிவின் படிப்படியான விரிவடைதல் நிகழ்கிறதென்று சொல்லப்படுகிறது. மேலும் மனம் தன் உட் கொள்ளுந் திறமைக் கப்பாலானதை யடையும் போது அது இயற்கையாக இலயமடைகிறது. அப்போது அங்கு மேலுந் தியானமில்லை; அங்கு தெய்வீக நுண்புலம் (ஞானம்) உண்டு. சிலர் இக்கொள்கையைக் கொள்கிறார்கள். எங்ஙனம் மனம் இம் முறையாற் சர்வ வியாபகமாகக் கூடுமென்பதை நான் கிரகிக்க முடியாதிருக்கிறேன்.

**மாதாஜி:.** எப்பொழுது தியானம் இயல்பாக நிகழ்கிறதோ அப்போது மட்டுமே அது உண்மையான தியானம். அது தானாக முயற்சியின்றி வரவேண்டும். மேலும் நீங்கள் மனம் இலயமடைகிறதென்று சொல்லும்போது அது எங்கிருந்து உற்பத்தியாகிறது?

**வினாவுபவர்:-** ஆத்மாவிலிருந்தே. நிழலுருவம்போன்று அது ஆன்மாவிலிருந்து வெளிப்பட்டுள்ளதென்று சுருதிகளில் சொல்லப் பட்டிருக்கிறது.

**மாதாஜி:-** எங்கு பிறப்பு உண்டோ அங்கு நாசம் இருக்க வேண்டும். இதைத்தான் நீங்கள் கருதுகிறீர்களோ? ஆனால் அது அவ்வாறாயிருந்தால் மனம் மேலும் வெளிப்படும். மனதின் சர்வ வியாபகத் தன்மையை நீங்கள் கிரகிக்க முடியவில்லையென்று சொல்கிறீர்களே. முற்றிலும் இயல்பாக அவ்வாறே, ஏனெனின் அது கிரகிக்கப் படும் பொருளன்று – அது ஒரு பொருளுமன்று. உலக இன்ப துன்பங்களை நீங்கள் அனுபவிக்கிறீர்கள்; மேலும் தியான நேரத்தில் நீங்கள் தற்காலிகமான இன்பம் நுகர்கிறீர்கள். இதுவும் கூட ஓர் அனுபவமே, அப்படியல்



லவா? ஆயினும் அது முந்தியதிலிருந்து நுண்ணியதாக வேறான இயல்புடையது.

தெய்வீக ஆனந்தத்தின் உன்னத நிலை (சமாதி) யிலிருந்து இறங்கிய பின் ஓர் அனுபவத்தைத்தான் விரித்துரைப்பதாக அல்லது குறிப்பிடுவதாக ஒரு மனிதன் சொல்லும்போது, அது இன்னும் அவனுக்கு ஏற்றமும் இறக்கமும் தொடர்ந்திருப்பதைக் குறிக்கிறது. அல்லாவிட்டால் எதற்காக அவன் இச்சொற்றொடர்களை வழங்க வேண்டும். ஆனால் ஏறுதலும் இறங்குதலும் கடந்த நிலை கூட ஒன்றிருக்கிறது. சமாதியில் மனம் ஒடுங்கிய நிலையிலிருந்த போதிலும் அது இருப்பதாய்க் கொள்ள வேண்டுமென்று நீங்கள் நிலை நிறுத்தலாம். உள் நோக்கும் நிலையிலிருந்து நான் பேசுகிறேன். அனுபவங்கள் பாதையில் நிகழ்கின்றன. இப்போது கூறப்பட்ட ஈர் அனுபவங்களுக்கிடையில் ஒரு வேற்றுமை உண்டு. அங்ஙனமாயினும் அவையிரண்டும் வேறு படித்தரங்களில் இருந்த போதிலும் மனதினதே; நீங்கள் சமாதி யென்று சொல்லுவதுங் கூட மனதினதே.

எப்படியாயினும் ஏற்றம் இறக்கத்தைப் பற்றி ஒருவர் பேச முடியாத இன்னொரு நிலை கூட உண்டு. ஆகையால் ஓர் உடலைப் பற்றியும் அன்று. உடல் அல்லது வினையைப் பற்றிய விசாரணை இன்னும் எழுந்தால் அது இந்நிலையடையப்பட வில்லையென்று பொருள் படுகிறது. மனம் இலய மடைகிறதென்று சொல்லும்போது எதற்குள் அது இலயமடைகிறது?

**வினாவுபவர்:—** நியதமாக ஆன்மாவுக்குள்ளே.

**மாதாஜி:—** உப்பு மறைவது போன்று மனமும் மறைகிறது — இதுவோ உங்கள் கருத்து. ஒரு குறிப்பிட்ட பார்வைக் கோணத்திலிருந்து அது அவ்வாறு தோன்றலாம். இவ்விதமான மனஒடுக்கத்திலிருந்துஒரு நிறையோகி மனதை மேலும் உயிர்ப்பிக்கக் கூடும்.

[தொடரும்]

# உண்மையன்பர்களுக்கு ஒரு சொல்

உண்மையெனும் உழவைச்செயு முயர்வேட்கையை விதைத்துக்
கண்மைதகை பொய்யாங்களை கட்டிப்பொறை நீரைத்
தண்மையுறப் பாய்ச்சித்தக வெனும்வேலியை யிட்டான்
கொண்மூவுறை சோலைநிறை கொழும்புத்துறையானே.

அன்பர்களே,

உணவின் இன்றியமையாமையை உணர்ந்து சிவதொண்டன் உணவு விருத்திக்கான ஒரு திட்டத்தை அமைத்துள்ளான். இன்றைய ஈழத்தில் உணவுப் பஞ்சம் என்னும் பெரும் பூதம் எம்மை நோக்கி மிரட்டிக்கொண்டுவர எத்தனிக்கிறது. ஆகவே, நாட்டு மக்களனைவரும் அப்பூதத்தை விரட்டியடிக்க முன்வரவேண்டும் என்பது திருவுள்ளத்திற் பூத்த திவ்விய சிந்தனையாகும். கருணையால் நம் எதிர்கால நன்மையை உத்தேசித்து எழுந்த இந்த உயரிய திட்டத்தை ஒவ்வொரு ஆடவனும் மகளும் ஆதரிக்க வேண்டும். ஏனெனில்,

1. உணவே எங்கள் உயிர்நாடி; உணவு விருத்திக்காகத் தன்னாலியன்றவரை உழைக்காதவன் உண்பதற்கு உரிமையில்லாதவன்.

2. இப்போதுள்ள நிலைமையில், இலங்கையில் எமக்கு வேண்டிய உணவு விருத்திக்காக வேண்டியவற்றில் ஒரு சிறிதும் முயலாமல் பிறர் உழைப்பிலேயே தங்கியிருப்போர் தொகை அதிகரித்திருக்கிறது. இந்த வகையில் நாம் வாழ்வோமாயின், இனிமேலும் அப்படி வாழ முடியாதநிலை விரைவில் வர, நாம் அடிமைத் தனத்தில் பெரிதும் மூழ்க வேண்டி நேரிடும்.

3. எதற்கும் வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டுமன்றோ? அன்னதான ஈடுபர்டோ உணவு விருத்தியோ ஆதியவற்றிற்கும் அவ்வாறே வருமுன் காக்கும் வழியைக் கோலுதல் வேண்டும்.

4. வெறும் ஊகம் அல்ல. வருங்கால நிலைமையை நன்கறியும் அநுபவம்மிக்க பெரியோர்கள் அறிந்து சொல்லவும் அதைக் கேட்டு ஆவன செய்யாது வாளா விருத்தல் எத்துணை அறியாமையாகும்? விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றுள் விழுபவர் செயலாகவன்றோ முடியும்?



5. உணவு எதற்காகச் செய்யப்படுதல் வேண்டும்? எமக்காக மட்டுமன்று பிறர்க்காகவுஞ் செய்யப்பட வேண்டும். தான் அளவாக உண்டு, பிறர்க்கும் பகுத்துண்டு வாழ்வதன்றோ வாழ்க்கையின் குறிக்கோள். அதனைச் செய்ய வேண்டாமா?

6. எம்முடைய பிற்சந்ததியாருக்குப் பெரியதொரு ஆபத்து வரவிருக்கிறது. அந்த ஆபத்தை நீக்குதற்கு இந்தப் பணி மிகமிக இன்றியமையாத தொன்றும். இதற்கு வழிகோல வேண்டுமல்லவா? அது எங்கள் கடமையல்லவா?

ஆகவே இவற்றையெல்லாம் உத்தேசித்து இத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கமாகச் சில ஏக்கர் விளை நிலத்தை விலைக்கு வாங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெறுகின்றன. ஆகவே திட்டம் செயலில் உருப் பெற்று விட்டது என்று கூறலாம்.

அன்பர்கள் இப்பணியைச் செய்து முடித்தால் அதனால் அவர்களுக்கு ஓர் அதிர்ஷ்டம் வரவிருக்கிறது.

எல்லோரும் இதற்குப் பணம் உதவ வேண்டும். பெரும் பொருள் படைத்தோர் மட்டுமல்ல, பணம் அதிகமில்லாதவரும் தம்மால் இயன்ற அளவு இதற்கு உதவ வேண்டும். இரண்டு ரூபா முதல் தம்மாலியன்ற தொகையை அவர்கள் இதற்கு உதவலாம்.

அதற்கும் வழியில்லாதவர் சல்லி முட்டியிற் சதக்காசுகளாகப் போட்டுச் சேர்த்தேனும் உதவலாமல்லவா? ஆகவே, அதற்கு அவர் மனம் ஆசைப்பட்டுச் செய்ய வேண்டும். அன்னதானம் செய்வோர்க்கும் இஃது ஓர் அரிய சந்தர்ப்பமாகும். இளைஞர்களும் இதிற் கலந்து பணியாற்ற முயல வேண்டும். முழுமனத்தோடு இதனைச் செய்தல் வேண்டும்.

ஆதலால் அன்பர்களே!

திருவருட் குறிப்பால் எழுந்த இவற்றைப் பூர்த்தி செய்தல் உங்கள் தலையாய கடனாகும். அதனை விரைவாகச் செய்தல் வேண்டும். இன்னே செய்யவும் வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் தாழ்மையாக வேண்டிக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணம்,
14-4-63.

இங்ஙனம்
சிவதொண்டன் சபையார்

ஓம்

# அந்தர் யோக சாதனை, சுவாமி விவேகானந்தர் நூற்றுண்டு விழா, வெசாக் விழா.

## இடம்:- சச்சிதானந்த தபோவனம், கண்டி. காலம் மே மீ 5ம், 6ம், 7ம், 8ம் திகதிகள்

++++++++++++++

# அந்தர் யோக சாதனை

**5–5–63 காலை முதல் 7–5–63 மத்தியானம் வரை**

உலக விவகாரங்களில் நான் எனது என்னும் ஆசையாணவப் பற்றேடு சதாகாலமும் கருமம் புரிந்து அல்லற்படும் மக்கள் இடையிடையே அவற்றினின்றும், இரண்டு மூன்று தினங்களாவது பூரணமாக விலகி, மனதை உள்முகப் படுத்தி இரவும் பகலும் தெய்வ சிந்தனையிலேயே லயிக்கப்பழகுதல் அவசியம். அதனுல் அவர்கள் மனம் தூய்மையும் திடமும்பெற்று, வாழ்வு வளம் பெறும்.

இத்தகைய வாய்ப்பை அன்பர்களுக்கு அளிக்கும் பொருட்டே அந்தர்யோக சாதனு தினங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

சுவாமி சச்சிதானந்தா.

அந்தர்யோக சாதனையிற் கலந்து கொள்ள விரும்புவோர் உணவுச் செலவுக்காகப் பத்து ரூபா (10.00) காரியதரிசியிடம் செலுத்திப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். படுக்கை விரிப்பு அவரவர்களே கொண்டு வருவது நலம்; 12 வயதுக்குட்பட்டவர்களும், குழந்தைகளோடு வரும் தாய்மார்களும் இதில் பங்கு பற்ற இயலாது.

தென்னக்கும்புர,
கண்டி.

காரியதரிசி
சச்சிதானந்த தபோவனம்

அந்தர் யோக நிகழ்ச்சி 5ம்உ ஞாயிறு, 6ம்உ திங்கள், 7ம்உ செவ்வாய்

| முற்பகல் | | | பிற்பகல் | | |
|---|---|---|---|---|---|
| 4.45 | மணிக்கு | துயில் எழுதல் - பிரார்த்தனை | 2.00 | மணிக்கு | தனியாக வாசித்தல் |
| 5.00 | ,, | காலைக்கடன் | 3.00 | ,, | உபந்நியாசம் |
| 5.30 | ,, | ஆசனம் | 4 00 | ,, | மாலைப்பானம் |
| 6.15 | ,, | ஸ்நானம் | 4.15 | ,, | உடலுழைப்பு |
| 7.15 | ,, | பிராணயாமம் | 5.00 | ,, | இளைப்பாறுதல் |
| 7.30 | ,, | ஜெபம், தியானம் | 6.00 | ,, | கூட்டுப்பிரார்த்தனை |
| 8.00 | ,, | ஆலய வழிபாடு | 6.30 | ,, | ஜெபம், தியானம் |
| 8.15 | ,, | காலைப்பானம் | 7.00 | ,, | ஆலய வழிபாடு |
| 8.30 | ,, | உபந்நியாசம் | 7-15 | ,, | இரவு உணவு |
| 9.45 | ,, | மௌனம் | 7.15 | ,, | ஸத் சம்பாஷணை சந்தேகம்தெளிதல் |
| 10.15 | ,, | லிகித ஜெபம் | 9-15 | ,, | சாந்தி பாடல் |
| 10.45 | ,, | பஜனை | 9.30 | ,, | நித்திரைக்குப் போதல் |
| 11.45 | ,, | ஆலய வழிபாடு | | | |
| 12.00 | ,, | பகலுணவு, ஓய்வு | | | |

‡‡‡‡‡‡‡ ‡‡‡‡‡‡‡

## 7.5.63 செவ்வாய்க்கிழமை மாலை4மணிக்கு

# சுவாமி விவேகானந்தர்

## நூற்றுண்டு விழாவும்

## 8.5.63 புதன்கிழமை மாலை 4 மணிக்கு

# வெசாக் விழாவும்

சிறப்பாக நடைபெறும்.

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300


## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| தெய்வீக வாழ்க்கைச் சங்க மலர் | | 1—25 |
| வழிபாடு | | —25 |
| திருமுறைக்காட்சி | (நா. முத்தையா) | 1—50 |
| கேதார் பத்திரி யாத்திரை | ,, | —75 |
| ஸ்ரீ கதிரைமணி மாலை | (பரமஹம்ச தாசன்) | —50 |
| தீங்கனிச்சோலை | ,, | 2—50 |
| அறிவுரைக் கதைகள் | (சுவாமி சிவானந்தர்) | —65 |
| இளங்கோவின் கனவு | (செ. நடராசன்) | 2—25 |
| ஆத்ம நாதம் | (சுத்தானந்த பாரதியார்) | 3—00 |
| கீதாயோகம் | ,, | 2—50 |
| கந்தரநுபூதி — பொழிப்புரையுடன் | | —25 |
| மார்கழிப் பாட | | —20 |


## சந்தா நேயர்களுக்கு.

அன்புடையீர்

இன்றுவரை 15ம் ஆண்டுக்குரிய சந்தா அனுப்பியவர்களுக்கு உடனுக்குடனேயே ரசீது அனுப்பியுள்ளோம். அவர்களுச்கெல்லாம் எமது நன்றி உரித்தாகுக. இன்று வரை சந்தா அனுப்பாதோர் உடனே அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

## ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.

(சிலோன்.)

போன்;— 353.

இந்தியாவிலுள்ள அன்பர்கள் வழக்கம்போல்

R. வீரசம்பு, சம்பு இண்டஸ்ரீஸ், அரிசிப்பாளையம், சேலம்—9. என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்து, அதை எமக்கும் தெரியப்படுத்த வேண்டுகின்றோம்.


## வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு . முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம். கைகால்அசதி பிடிப்பு பசியின்மை. வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4ரூபா 25சதம்.

[பத்தியமில்லை]

சம்பு இண்டஸ்ரீஸ் — அரிசிப் பாளையம்சேலம் 9 (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி.


இப்பத்திரிகை ஆத்மஜோதிநிலையத்தாருக்காக ஆத்மஜோதி அச்சகத்தில் திரு. நா. விநாயகமூர்த்தியால் அச்சிட்டுவெளியிடப்பெற்றது. 14-4-63.